முரசு :12 ஒலி: 273
8 பக்கங்கள் விலை: 500 காசுகள்
MALAI MURASU
Reg. No.CB/100/2021-2023
RNI Regn. No. TNTAM/2016/75063
மாலை முரசு
கோவை
WWW.MALAIMURASU.COM
திங்கட்கிழமை
06-11-2023 (ஐப்பசி-20)
★★

# மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள்:

# ஆளுநர்களுக்கு உச்சநீதிமன்றம் அறிவுரை!

## ‘ஆய்வு செய்ய அதிகாரம் இருந்தாலும் விரைவாக முடிவு எடுக்க வேண்டும்’!

புதுடெல்லி, நவ.06–

மாநில அரசுகள் இயற்றும் சட்டங்களை ஆய்வு செய்ய ஆளுநர்களுக்கு அதிகாரம் இருந்தாலும் அவர்கள் விரைவாக முடிவு எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அறிவுரை வழங்கியுள்ளார்.

பஞ்சாப் மாநில கவர்னர் பன்வாரிலால் புரோகித்தை எதிர்த்து அந்த மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தது. அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

பஞ்சாப் மாநில சட்டப்பேரவையை கூட்டுவதற்கே மாநில ஆளுநர் முட்டுக்கட்டையாக உள்ளார். மாநில அரசின் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் பஞ்சாப் மாநில கவர்னர் பன்வாரிலால் புரோகித் தாமதித்து வருகிறார். கடந்த முறை பஞ்சாப் சட்டப்பேரவை கூடியபோது நிறைவேற்றப்பட்ட 7 மசோதாக்களுக்கு ஒப்புதல் தரவில்லை. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் காலதாமதம் செய்கிறார்.

மாநில அரசின் மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு இன்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது தலைமை நீதிபதி சந்திரசூட் சரமாரியான கேள்வியை எழுப்பினார். அப்போது அவர் கூறியதாவது:

தெலுங்கானா ஆளுநர் தமிழிசை மீது மாநில அரசு

6–ம் பக்கம் பார்க்க



கோவையில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் பாடி மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

### இலங்கை மலையகத்தமிழர் விழாவில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி உரையை ஒளிபரப்ப தடை!

### மத்திய அரசுக்கு வைகோ கடும் கண்டனம்!!

சென்னை, நவ.06–

இலங்கை மலையகத் தமிழர் விழாவில் முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் காணொளி உரையை ஒளிபரப்ப தடைவிதித்த மத்திய அரசுக்கு வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தென் தமிழகத்தில் இருந்த அப்பாவி மக்களை வலு கட்டாயமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தியது பிரிட்டிஷ் அரசு. அவர்கள் இலங்கை மலையகத் தமிழர்கள் என்ற பெயரில் அடையாளப்படுத்தப்பட்டார்கள். இலங்கையில் குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழர்கள் புலம்பெயர்ந்த 200 வது ஆண்டு தற்போது அனுசரிக்கப்படுகிறது. “நாம் 200 ஒற்றுமை பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரியத்தின் முழக்கம்” என்ற பெயரில் மூன்று நாட்கள் நிகழ்ச்சிகள் நடந்தது.

இந் நிகழ்ச்சியை இலங்கை மலையக தமிழர்களுக்காக இலங்கையின் உள்நாட்டு தோட்ட தொழில் துறை மற்றும் அரசு தொழில்துறை அமைச்சகம் முன்னெடுத்தது.



இலங்கையில் உள்ள மலையக தமிழர்களின் உறவு பாலமாக இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்னெடுத்த, இந்த நிகழ்ச்சியில் மலையக தமிழர்கள் அவர்களின் பூர்வீக தமிழ் பூமி சார்ந்த அரசியல் பிரதிநிதிகளாக தமிழ்நாட்டிலிருந்தும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.

இதில் தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார்.

இலங்கை அரசின் பங்களிப்புடன் இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்க வேண்டும் என இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் காணொலி வாயிலாக மலைகத் தமிழர்களின் நாம் 200 விழாவிற்குவாழ்த்துரைவழங்கி அனுப்பியிருந்தார்.

அந்த உரையில், “மனிதன் வாழ்ந்திராத மலைக் காடுகளை மலையகத் தோட்டங்களாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்கள்! மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு இலங்கையில் காப்பி பயிர் செய்யப்பட்ட ஆரம்பகாலம் முதல் தொடங்குகிறது.

1823ஆம் ஆண்டு கம்பளைக்கு அருகே உள்ள சிங்கபிட்டியஎன்றகிராமத்தில் கேப்டன் ஹென்றி பேட் என்ற பிரிட்டிஷ்காரர்,

3–ம் பக்கம் பார்க்க

### நீட் தேர்வு விலக்கு கோரி கையெழுத்து:

## அ.தி.மு.க., பா.ம.க. தலைவர்களை சந்திப்பேன்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!!

சென்னை,நவ.06–

நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க சார்பில் கையெழுத்து இயக்கம் நடைபெற்று வரும் நிலையில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை அசோக் நகரில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவனிடம் கையெழுத்து பெற்றார்.

நீட் விலக்கு கோரும் கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் வி.சி.க ரவிக்



குமார் எம்.பி., எம்.எல்.ஏக்கள் எஸ்.எஸ். பாலாஜி, ஆளூர் ஷா நவாஸ், பனையூர் பாபு உள்ளிட்ட நிர்வாகிகள் கையெழுத்து போட்டனர்.

இதில், திமுக எம்.எல்.ஏ மயிலை வேலு கலந்து கொண்டார்.

பின்னர் நிருபர்களிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்கூறியதாவது:–

நீட்விலக்குநம்இலக்கு என்றகையெழுத்துஇயக்கம். 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இயக்கம் தொடங்கி நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து 6 வருடத்தில் அனிதா ஆரம்பித்து 22 மாணவர்கள் உயிரிழந்து உள்ளனர். இதுவரை 10 லட்சம் கையெழுத்து பெற்றுள்ளோம்.

ஆன்லைன் மூலம் ‘நீட் தடை’ என்ற தலைப்பில் கருத்து தெரிவிக்கும் பகுதியில் 3 லட்சம் பேர் பங்கேற்று கையெழுத்து போட்டுள்ளனர். அனைத்து இயக்கம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அடுத்தகட்டமாக அதிமுக, பாமக உள்ளிட்ட கட்சி தலைவர்களை சந்திக்க நேரம் கேட்டுள்ளேன்.

நாங்கள் உண்மையாக போராடி வருகிறோம், எதிர்க்கட்சியாக இருக்கும் போது ஒன்று ஆளுங்கட்சியாக இருக்கும்

3–ம் பக்கம் பார்க்க

### காணொளி காட்சி மூலம் ஆஜர்:

## அமைச்சர் செந்தில்பாலாஜியின் காவல் 10-ஆவது முறையாக நீடிப்பு!

சென்னை, நவ.06–

அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை நவம்பர் 22ஆம் தேதி வரை நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்ட வழக்கில், அமலாக்கத் துறையினரால் கடந்த ஜூன் 14ல் அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக கடந்த ஆகஸ்ட் 12 ஆம் தேதி 120க்கும் மேற்பட்ட பக்கங்களை கொண்ட குற்றப்பத்திரிக்கை மற்றும் 3 ஆயிரம் பக்கங்களை கொண்ட ஆவணங்களை டிரங்கு பெட்டியில் அமலாக்கத் துறையினர் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். அவரது ஜாமின் மனுவை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் இரு முறை தள்ளுபடி செய்த நிலையில், உயர் நீதிமன்றமும் (அக்டோபர் 19) தள்ளுபடி செய்தது.

இதனை எதிர்த்து செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு நவம்பர் 20ம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது.

இந்த நிலையில் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் இன்றுடன்



நிறைவடைந்த நிலையில், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.அல்லி முன்பு புழல் சிறையில் இருந்து காணொளி காட்சி மூலமாக ஆஜர்படுத்தப்பட்டார்.

இதையடுத்து செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை, நவம்பர் 22–ஆம் தேதி வரை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டார். இதன்மூலம் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் பத்தாவது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், இந்த வழக்கு தொடர்பாக பறிமுதல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாமல் அமலாக்கத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஆவணங்களை வழங்க கோரி செந்தில்பாலாஜி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு குறித்து அமலாக்கத் துறை பதிலளிக்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.




திருப்பூர் புதுமார்க்கெட் வீதியில் தீபாவளிக்கு பொருட்கள் வாங்க இன்று அலைமோதிய மக்கள் கூட்டத்தை படத்தில் காணலாம்.

# பெருகி வரும் பாலியல் தொழில்...



# ஆண்களுக்கு ஒரு லட்சம் ... பெண்களுக்கு 50 ஆயிரம் ...

பாலியல் தொழில் என்பது மன்னர் ஆட்சிமுதல் மக்கள் ஆட்சி வரை பல்வேறு பரிணாம வளர்ச்சிகளை அடைந்து பல்வேறு யுத்திகளில் கையாளப்பட்டு வருகிறது.

சாதி, மதம், மொழி, இனம் கடந்து எந்தவித பேதமும் இன்றி செய்யப்படும் தொழில்களில் பாலியல் தொழிலும் ஒன்று. ஒருகாலத்தில் மறைவான இடங்களில் நடத்தப்பட்ட இந்த தொழில் சமூக வலைதளங்கள் மற்றும் நாகரீக வளர்ச்சி காரணமாக தற்போது வெளிப்படையாக நடைபெற தொடங்கிவிட்டதுதான் கொடுமை.

அதே போல புரோக்கர்கள் மூலமாக தொடங்கிய இந்த பாலியல் தொழில், தொழில்நுட்பம் வளர்ந்த நிலையில், செல்போன் எண்கள் மூலமாகவும் தங்கள் தொழிலை வளர்த்து கொள்ளும் நிலைக்கு மாறியது. ஆனால் தற்போதோ வாட்ஸ் அப், டெலிகிராம், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட செயலிகளின் வழியாக தங்களது தொழிலை சத்தமின்றி நடத்தி வருகின்றனர்.

### ரெட்லைட் ஏரியா

இப்போது எல்லாம் மேற்கண்ட செயலிகளில் கணக்கு வைத்திருக்காத நபர்களை தேடுவது கடினம். வயதானவர்கள் முதல் சிறுவர்கள் வரை அனைவரும் இன்ஸ்டாகிராமில் கணக்கு வைத்துள்ளனர்.

இதை ஒரு நாகரீகமாக மட்டுமல்ல, கவுரவமாகவும் நினைக்க தொடங்கிவிட்டனர்.

மும்பையை எடுத்துக்கொள்ளுங்கள்.காமாத்திபுரா பகுதியில் பாலியல் தொழில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. ரெட்லைட் ஏரியா என முத்திரை குத்தப்பட்டுள்ள இந்த பகுதியில் பெண்கள் தங்கள்வாடிக்கையாளர்

களுக்காக வாசலில் காத்துக் கொண்டிருக்கும் காட்சிகளை இப்போதும் காணலாம். ஓட்டலில் உள்ள டிஜிட்டல் திரையில் பாலியல் பற்றிய பகிரங்க அறிவிப்பு நிழலாடுவதையும் காணலாம்.

### கொடி கட்டி பறக்கிறது

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ராணுவ வீரர்களின் பாலியல் தேவைகளுக்காக உருவாக்கப்பட்டது தான் இந்த பாலியல் தொழில். அந்த ரெட் லைட் ஏரியாவில் சுதந்திரத்திற்கு பிறகும் தற்போது வரை அங்கு பாலியல் தொழில் கொடி கட்டி பறக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பாலியல் தொழிலுக்கு தடை இருக்கும் நிலையில் அங்கும் இங்கும் நடைபெற்று வரும் இந்த பாலியல் தொழில் சம்பவங்கள்ஒரு பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.

சென்னையில் போலீசாரின் உரிமம் பெற்று முறையான பயிற்சிகள் பெற்ற வல்லுனர்களின் உதவியோடு மனித உடலில் ஏற்படும் வலிகளை போக்கும் வகையிலும், மனதிற்கு புத்துணர்ச்சி ஏற்படுத்தும் வகையிலும் ஆண் மற்றும் பெண் என இருபாலருக்கும் மசாஜ் மற்றும் ஸ்பா சென்டர்கள் மூலமாக பல்வேறு சேவைகளை தனியார் மசாஜ் மற்றும் ஸ்பா சென்டர்கள் கொடுத்து வருகின்றன.

### கை நிறைய காசு கிடைக்கும்

ஆனால் சில கும்பல்கள் போலீசாரின் முறையான உரிமம் பெற்றதாக கூறிக்கொண்டு, எந்த வித உரிமம் மற்றும் பயிற்சி பெறாமல் சட்ட விரோதமான செயல்கள் மற்றும் சில மசாஜ் சென்டர்களில் பாலியல் தொழில் உள்ளிட்டவை நடைபெற்று வருவதாக போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சில மாதங்களுக்கு முன்பு போலீசார் சென்னை மாநகரம் முழுவதும் 151 மசாஜ் சென்டர் மற்றும் ஸ்பா சென்டர்களில் அதிரடியாக சோதனை நடத்தினர்.

கீழ்ப்பாக்கம், தியாகராயநகர், அண்ணாநகர், வடபழனி, அடையாறு, திருவான்மியூர், தாம்பரம், ஆவடி, உள்ளிட்ட இடங்களில் உள்ள ஸ்பா மற்றும் மசாஜ் சென்டர்களில் போலீசார் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இதில் பல பெரிய புள்ளிகளும் சிக்கினர். சென்னைக்கு வேலை தேடி வந்த பெண்களிடம் கை நிறைய காசு கிடைக்கும் என்று ஆசை காட்டி காமத்தில் விழவைத்த புரோக்கர்கள் பற்றி கிடைத்த திடுக்கிடும் தகவலின்அடிப்படையில் நடவடிக்கை எடுத்தது போலீஸ். அதிக அளவில் அடைத்து வைக்கப்பட்டிருந்த அபலைப் பெண்களையும் போலீசார் மீட்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பாக பாலியல் தடுப்பு பிரிவில் பணியாற்றிய இரண்டு காவல் ஆய்வாளர்கள் ஸ்பா மற்றும் மசாஜ் சென்டரில் பாலியல் தொழில் நடைபெறுவதற்கு துணையாக இருந்ததாகவும், அவர்களிடம் பணத்தை வாங்கி கொண்டு சட்ட விரோதமாக பாலியல் தொழிலுக்கு நடத்த அனுமதி அளித்தாகவும் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். அந்த இருவருக்கும் சொந்தமான இடங்களில் அதிரடியாக சோதனை நடத்தி ஆவணங்கள் மற்றும் கணக்கில் வராத பணத்தை பறிமுதல் செய்தனர்.

### அதிர்ச்சியை ஏற்படுத்தியது

சென்னை சைதாப்பேட்டை, சின்னமலை பகுதியில் நூற்றுக்கணக்கான தனியார் தங்கும் விடுதிகள் செயல்பட்டு வருவராக கூறுகிறார்கள். உள்ளூர் அதிகாரிகள் ஒத்துழைப்புடன் இந்த பாலியல் தொழில் பக்குவமாக நடைபெறுகிறதாம்.

அம்பத்தூரில் சிறுமிகளை கட்டாயப்படுத்தி பாலியல் தொழில் நடத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது,சென்னையிலுள்ள பிரபலமான என்ஜினீயரிங் கல்லூரி ஒன்றில் மூன்றாம் ஆண்டு படித்து வந்த விஜயா,. இவரின் ஆண் நண்பர் ஒருவருடன் சேர்ந்து விஜயா, ரகசியமாக பாலியல் தொழிலில் ஈடுபட்டுவந்திருக்கிறார். இதற்காக இவர்கள் இருவரும் எழும்பூர் பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள விடுதியில் அறையை முன்பதிவு செய்வார்கள்.

### ரகசிய தகவல் கிடைத்தது

வாடிக்கையாளர்களைப் பிடிக்க விஜயாவும் அவரின் ஆண் நண்பரும் இணையதளத்தில் விளம்பரமும் செய்திருக்கிறார்கள். இது குறித்து போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக்கு மாறுவேடத்தில் வாடிக்கையாளர்கள் போல சென்ற போது விஜயா பிடிபட்டார். போலீசாரைக் கண்டதும் ஆண் நண்பர் மாயமாகி விட்டார்.

இந்த விடுதியின் ஓனர் வெளிநாட்டில் இருக்கிறார். அதனால் விடுதியின் மேலாளர் என்பவருக்கு தெரிந்தே இவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டுவந்திருப்பதாக போலீசார் கூறுகிறார்கள்.

சென்னையில் தற்போது பல்கி பெருகி 500க்கும் மேற்பட்ட மசாஜ் சென்டர்கள் எண்ணிக்கை உயர்ந்துவிட்டதாம்.

அதில் பெரும்பாலான மசாஜ் சென்டர்களின் பாலியல் தொழில் படுஜோராக நடைபெற்று வருவதாக அதிர்ச்சித் தகவலும் வெளியாகியுள்ளது.

பெரும்பாலும் புரோக்கர்கள் காவல்நிலையங்கள் அருகில் உள்ள வீடுகளையே வாடகைக்கு தேர்ந்தெடுக்கிறார்கள்.

சென்னை திருவல்லிக்கேணி பகுதியில் பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்துவதாக வண்ணாரப்பேட்டை காவல்துறையினருக்கு தகவல் கிடைத்தது.

போலீசார் அந்த பகுதியில் உள்ள, தங்கும் விடுதி ஒன்றிற்கு சென்று அதிரடி சோதனை நடத்தினர்.

### பத்திரமாக போலீசார் மீட்டனர்

இந்த ரெய்டில் பாலியல் தொழில் நடத்தி வந்த பிரகாஷ், ஏசு என்கிற இருவரையும் போலீசார் கைது செய்தனர். அந்த விடுதியில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட 9 பெண்களை பத்திரமாக போலீசார் மீட்டனர்.

சில இடங்களில் நேர்காணலில் வெற்றிபெற்றுவிட்டால் அவர்களுக்கான மாத ஊதியம் பற்றி விளக்கும்போது கூடவே, ஆண் பாலியல் தொழில் பற்றியும் விளக்கமளிக்கிறார்களாம்.

இப்படியும் ஒருசில புரோக்கர்கள் இருக்கிறார்கள். அவர்களின் வசதிக்கேற்ப நீங்கள் நடந்து கொண்டால் வருமானம் அதிகம் கிடைக்கும் என மூளைச்சலவை செய்கிறார்கள். பணம் அதிகமாக கிடைப்பது, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை மனதில் நினைத்து சில ஆண்களும் இந்த தொழிலில் இறங்கிவிடுகிறார்கள்.

வெளிநாட்டில் கணவன்வேலை செய்ய தனிமையில் இருக்கும் சில மனைவிமார்கள் இன்ப வடிகாலுக்காக ஆண்களை ஆன்லைன் மூலம் தேடத் தொடங்கிவிடுகிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விலை, வயதுக்கு ஏற்றவாறு அழகுக்கு ஏற்றவாறு விலையை நிர்ணயிப்பார்களாம்.

ஒரு இரவுக்கு 1 லட்சம், ஐம்பதாயிரம் என வழங்கப்படுமாம். ஒரு மாதத்திற்கும் இவர்கள் ஒப்பந்தம் செய்யப்படுவதுண்டாம்.

சென்னையில் உள்ள நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் ஸ்பாக்கள் போன்றவை இவர்கள் தங்குவதற்கு தேர்வு செய்யப்படுகிறது. தொழில் ரீதியான பின்னணியில் இந்த ஆண் பாலியல் தொழில் நடைபெறுவதால் இவர்களை பிடிப்பது என்பது போலீசாருக்கு சிம்ம சொப்பனமாக உள்ளதாம்.

அங்கு சென்று இவர்களிடம் விசாரித்தால், இவர் என்னுடைய பி.ஆர்.ஓ.என்னுடைய வாடிக்கையாளர்கள் என்றும் வேலை நிமித்தமாக எங்கள் சந்திப்பு உள்ளது என பதில் சொல்லிவிடுதால் இவர்களை கண்டுபிடிக்க போலீசார் திக்குமுக்காட வேண்டியது உள்ளதாம்.

சென்னை பெருங்குடியில் ஸ்பாவில் பாலியல் தொழில் நடத்திய நபரை கைது செய்தனர். அதே போல , பாலியல் தொழில் நடத்தப்பட்ட ஸ்பா ஒன்றில் அதிரடியாக சோதனை நடத்திய போலீசார், பாலியல் தொழில் நடத்திய கொருக்குப்பேட்டையை சேர்ந்த பிரதீப் என்பவரை கைது செய்தனர். அங்கிருந்த வட மாநிலப் பெண் ஒருவர் மீட்கப்பட்டார்.

### இது ரகசியம் பரம ரகசியம்

திரை உலக திரைமறைவில் நடக்கும் பாலியல் சொகுசுக்கு, இரவுக்கு ரூ.25,000, பகலுக்கு ரூ.15,000 என இளம் பெண்களை வைத்து பாலியல் தொழில் செய்த இரண்டு நடிகைகள் சமீபத்தில் அதிரடியாக கைதுசெய்யப்பட்டுள்ளனர்

இது நடந்தது புனே அருகே உள்ள ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில். இரண்டு நடிகைகள் இளம்பெண்களை ஏமாற்றி பாலியல் தொழிலில் ஈடுபட்டுத்துவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனை அடுத்து நடந்த அதிரடி சோதனையில் அந்த நட்சத்திர ஓட்டலில் பெண்களை ஏமாற்றி பாலியல் தொழில் செய்த போஜ்புரி நடிகைகள், புரோக்கர் கைது செய்யப்பட்டனர். ஆனால் சென்னையில் இது ரகசியம்...பரம ரகசியம்...

ஆயுர்வேத மசாஜ் எனும் பெயரில் காமவேதம் பரப்பும் கயவர்கள் இன்று பெருகி வருகின்றனர். இது போன்று பல்வேறு பெயரில் பாலியல் தொழில் நடத்தப்படும் இடங்களில் அவ்வப்பொழுது போலீசாரின் தடாலடி நடவடிக்கைகளோடு நிற்காது, தொடர்ந்து கண்காணித்து இவர்களை உள்ளே வைத்து லத்தி மசாஜ் கொடுப்பதை தவிர வேறு வழி இருப்பதாக தெரியவில்லை என்கிறார்கள் சில சமூக ஆர்வலர்கள்.



பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை மணப்பாறையில் நடை பயணம் சென்ற போது அங்குள்ள கடையில் முறுக்கு பிழிந்ததை படத்தில் காணலாம்.

### சமூக விரோத எண்ணத்துடன் தகவல் தேடுவோரை கண்டறிய

# கூகுல்- யூ-டியூப் நிறுவனத்துடன் சைபர் கிரைம் கை கோர்ப்பு!

## கேரள குண்டுவெடிப்பை தொடர்ந்து நடவடிக்கை!!

சென்னை, நவ. 6–

கேரளகுண்டுவெடிப்பு சம்பவத்தைத்தொடர்ந்து சமூக விரோத எண்ணத்துடன்தகவல்தேடுவோரை கண்டறிய கூகுல்– யூ–டியூப் நிறுவனத்துடன் சைபர் கிரைம் போலீசார் கை கோர்த்துள்ளனர்.

அவதூறு பரப்புதல், கலவரத்தைத் தூண்டும் வகையில் கருத்து பதிவேற்றம் செய்தல் உட்பட பல்வேறு வகையான ‘சைபர்’ குற்றங்கள் தொடர்பாக சென்னை சைபர் கிரைம் மற்றும் மாநில சைபர் கிரைம் போலீசார் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். குறிப்பாக டுவிட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் வலைதளப் பக்கங்கள் போலீசாரின் கண்காணிப்பு வளையத்தில் உள்ளன.

ஆனால், கூகுளில் நமக்கு தேவையான கருத்துகள், புகைப்படங்கள், யூ–டியூப் வீடியோக்களை தேடுவோர் யார்? எந்த வகையானவற்றை தேடுகின்றனர் போன்ற தகவல்களை போலீசாரால் உடனடியாக திரட்ட இயலாத நிலை உள்ளது. ஒருவர் சமூக விரோத செயலில் ஈடுபட்டு அதுதொடர்பாக அவர் பிடிபட்ட பின்னர்தான் அவரது செல்போன், லேப்டாப் உள்ளிட்ட மின்னணு சாதனங்கள் பறிமுதல் செய்யப்படும்.

அதை ஆய்வு செய்த பின்னரே அவர் கூகுளில், யூ–டியூப்பில் எந்த மாதிரியான கருத்துகள் மற்றும் வீடியோக்களை தேடி உள்ளார் என்பதை போலீசாரால் கண்டறிய முடியும். அவர் பிடிபடும் வரை அது தொடர்பான தகவல்கள் தெரியாது. அதேபோல், சமூக விரோத செயலில் ஈடுபடும் நோக்கில் செயல்பட்டாலும் அதை முன்கூட்டியே கண்டறிய முடியாது.

அண்மையில் கூட கேரளாவில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது. இச் செயலில் ஈடுபட்டதாக கைது செய்யப் பட்ட டொமினிக் மார்ட்டின் என்பவர், ‘யூடியூப்பை பார்த்து வெடிகுண்டுகள் தயாரித்தேன்’ என போலீசாரிடம் வாக்குமூலம் அளித்திருந்தார்.

இதையடுத்து, இது போன்ற தொரு அசம்பாவித சம்பவம் தமிழகத்தில் நடைபெற்று விடக்கூடாது என்பதில் போலீசார் உறுதியாக உள்ளனர். எனவே, இதுகுறித்து, தமிழக காவல் துறையின் சட்டம் – ஒழுங்கு டி.ஜி.பி. சங்கர் ஜிவால், மாநில சைபர் கிரைம் கூடுதல் டி.ஜி.பி. சஞ்சய் குமாருடன் அண்மையில் ஆலோசித்தார்.

இதையடுத்து, கூகுள் மற்றும் யூடியூப்பை கண்காணிக்கும் பணியை போலீசார் தொடங்கி உள்ளனர். அதாவது வெடிகுண்டு தயாரிப்பது, துப்பாக்கி தயாரிப்பது உள்ளிட்ட சமூக விரோத செயலில் ஈடுபடும் வகையில் அது தொடர்பாக யாரேனும் கூகுளில் தேடி உள்ளனரா?

யூடியூப் வீடியோக்களைபார்த்துள்ளனரா? என அந்நிறுவன அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதுதொடர்பான தகவலை தெரிவிக்கும்படி கேட்டுள்ளனர்.

இதன்மூலம் முன்னெச்சரிக்கை யாக சமூக விரோத மற்றும் அசம்பாவிதசெயல்களைச்செய்ய திட்டமிடுவோரைக் கண்டறிந்து, அவற்றைதடுக்க முடியும் என போலீசார் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து கூடுதல் டி.ஜி.பி. சஞ்சய் குமார் கூறும்போது, ‘‘சைபர் குற்றங்களைத் தடுக்க பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இதுதொடர்பாக டிஜிபி பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கி உள்ளார். தற்போது கேரளாவில் யூ–டியூப்பைப் பார்த்து ஒருவர் வெடிகுண்டு தயாரித்து அதை வெடிக்கவும் வைத்துள்ளார்.

எனவே, இதுபோன்ற தொரு அசம்பாவித சம்பவம் தமிழகத்தில் நடைபெறாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூகுள் மற்றும் யூடியூப் நிறுவனத்துடன் தொடர்பில் உள்ளோம்.’’

தினந்தோறும்
சினிமா செய்திகள்
வெளியாகும்

# இந்திய ராணுவத்தில் அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்கள்!

## வருகிற பிப்ரவரியில் இணைகிறது!!

புதுடெல்லி,நவ.06

அடுத்த ஆண்டு பிப்ரவரியில் இந்திய ராணுவத்தில் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் இணைக்கப்பட உள்ளன.

அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான போயிங்கின் அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்கள், அமெரிக்க ராணுவத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவின் நட்பு நாடுகளான பிரிட்டன், இஸ்ரேல் உட்பட 18 நாடுகளின் ராணுவத்தில் இந்த வகை ஹெலிகாப்டர்கள் பயன்பாட்டில் உள்ளன.

அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் மணிக்கு 289 கி.மீ. வேகத்தில் பறக்கக் கூடியது. மோசமான வானிலையிலும் ஹெலிகாப்டரை இயக்க முடியும். அதிகபட்சமாக 2,800 அடி உயரம் வரை பறக்கும்.ஒருநிமிடத்தில் 128 இலக்குகளை குறி வைத்து தாக்கும் திறன் கொண்டது. இதன்மூலம் எதிரிகளின் போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், டிரோன்களையும் தரை இலக்குகளையும் துல்லியமாக தாக்கி அழிக்க முடியும்.

கடந்த 2015–ம் ஆண்டில் இந்திய விமானப் படைக்காக 22 அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. இவை தற்போது விமானப்படையில் சேவையாற்றி வருகின்றன.

இதைத் தொடர்ந்து இந்திய ராணுவத்துக்காக ரூ.5,691 கோடியில் 6 அப்பாச்சி ஹெலிகாப்டர்களை வாங்க கடந்த 2020–ம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி அமெரிக்காவின் அரிசோனா மாகாணம், மெசா பகுதியில் உள்ள போயிங் ஆலையில், இந்திய ராணுவத்துக்காக அப்பாச்சி ஹெலிகாப்டர்களை தயாரிக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

அடுத்த ஆண்டு பிப்ரவரி முதல் ஜூன் மாதத்துக்குள் 6 அப்பாச்சி ஹெலிகாப்டர்களும் இந்திய ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளன. பறக்கும் பீரங்கிகள் என்றழைக்கப்படும் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் இணைக்கப்பட்ட பிறகு ராணுவத்தின் பலம் மேலும் பலமடங்கும் அதிகரிக்கும்.

மேலும் இந்திய விமானப்படை, ராணுவத்துக்காக உள்நாட்டில் 156 ஹெலிகாப்டர்களை தயாரிக்க இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட உள்ளன. இவை சியாச்சின், கிழக்கு லடாக் பகுதிகளில்நிலைநிறுத்தப்படும் என்று ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### அரசுப் பணியில் சேர

# மீனவ சமுதாய பட்டதாரி இளைஞர்களுக்கு இலவச பயிற்சி!

கிருஷ்ணகிரி, நவ. 6–

மீனவ சமுதாய பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப்பணியில் சேர இலவச பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம் என கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் சரயு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் சென்னை அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம் இணைந்து ஆண்டுதோறும் 20 கடல் மற்றும் உள்நாட்டு மீனவ பட்டதாரி இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குடிமைப்பணிகளுக்கான போட்டித்தேர்வில்கலந்து கொள்ள ஏதுவாக பிரத்யேக பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடல் மற்றும் உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறப்பினர்கள் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் வாரிசு பட்டதாரி இளைஞர்கள் இப்பயிற்சியில் சேரலாம்.

இத்திட்டத்தில் பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பம் மற்றும் அரசு வழிகாட்டு நெறிமுறைகளை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் ஷ்ஷ்ஷ். யீ வீ s லீ மீ கூ்ஷ் வீ மீ s . t ஸீ . ரீஷீஸ்.வீஸீ என்ற இணையதளத்தில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது விண்ணப்ப படிவங்களை மண்டல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை, துணை இயக்குனர்கள் மற்றும் மாவட்ட உதவி இயக்குனர் அலுவலகங்களில் அலுவலக வேலை நாட்களில் விலையின்றி பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் இணைய தளத்தில் உள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படி பூர்த்தி செய்து, உதவி இயக்குனர் அலுவலகம், கிருஷ்ணகிரி மீன் பண்ணை எதிரில், கே.ஆர்.பி., அணை அஞ்சல், கிருஷ்ணகிரி & 635101 என்ற முகவரிக்கு வரும் 18ம் தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04343&235745 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தனது செய்திக் குறிப்பில் கலெக்டர் சரயு தெரிவித்துள்ளார்.

### சனாதன எதிர்ப்பு மாநாடு:

# உதயநிதி, சேகர்பாபு மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## காவல்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம்!!

**சென்னை, நவ.06–** சனாதனஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு சனாதன தர்மத்திற்கு எதிராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியது பெரும் சர்ச்சையை கிளப்பி இருந்தது. அமைச்சர்கள்உதயநிதிஸ்டாலின், சேகர்பாபு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோருக்குஎதிராககோவாரண்டோ வழக்கும் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், திராவிட கொள்கைக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு திருவேற்காட்டை சேர்ந்த மகேஷ் கார்த்திகேயன் என்பவர் சென்னை உயர்மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன், சனாதான ஒழிப்பு மாநாட்டில் தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டு பேசியதன் விளைவாகவே தற்போது திராவிட கொள்கைக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு வழக்கு தொடரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் பொது நிகழ்ச்சிகளில் பேசும்போது மக்களுக்குள் சாதி, மதம், மற்றும் கொள்கை ரீதியாக பிளவு ஏற்படாதவாறு கவனத்துடன் பேச வேண்டும் என அறிவுறுத்திய நீதிபதி, குறிப்பிட்டகொள்கையை ஒழிக்க வேண்டும் என பேசுவதற்கு பதிலாக மது உள்ளிட்ட போதை பொருட்களைஒழிப்பதில் அமைச்சர்கள் கவனம் செலுத்தலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும், எந்த மதத்திற்கு எதிராக பேசுவதற்கும் நீதிமன்றம் அனுமதிக்காது என்று தெரிவித்த நீதிபதி, சனாதன தர்ம ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்ட தமிழக அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டது காவல்துறையின் தங்களுடைய கடமையை புறக்கணித்தது போன்றது எனவும்இரண்டுஅமைச்சர்கள் மீதும்நடவடிக்கைஎடுத்து இருந்திருக்க வேண்டும் என தெரிவித்து, இந்த மனுவைதள்ளுபடிசெய்து உத்தரவிட்டார்.

### எ.வ.வேலுவுக்கு தொடர்புடைய இடங்களில்

# இன்று 4–வது நாளாக வருமானவரித்துறை சோதனை!

**சென்னை, நவ.6** பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய இடங்களில் 4–ஆவது நாளாக இன்று வருமானவரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகிறார்கள். திருவண்ணாமலையில் உள்ள அவரது வீடு, பள்ளி, பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் 4–ஆவது நாளாக சோதனை நடந்து வருகிறது. எ.வ.வேலுவின் மகன்கம்பனுக்குச்சொந்தமானவீட்டிலும்சோதனை நடந்து வருகிறது.

மறைந்த கரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் வாசுகி முருகேசனின் சகோதரி பத்மா வீட்டில் நடந்த வருமானவரிச் சோதனை நேற்று இரவு நிறைவு பெற்றது. காந்திபுரம்பகுதியில்உள்ளசுரேஷ் என்பவர்நடத்தும்நிதிநிறுவனத்திலும், வையாபுரி நகரில் உள்ள அவரது வீட்டிலும் இன்று 4–வது நாளாக சோதனை நடந்து வருகிறது. கோவை நஞ்சுண்டாபுரம் பகுதியில் உள்ள தி.மு.க. பிரமுகர் மீனா ஜெயக்குமார் வீடு, அவரது மகன் ஸ்ரீராமின் பீளமேடு அலுவலகம், சவுரிப்பாளையத்தில் உள்ள காசா கிராண்ட் கட்டுமான நிறுவன அலுவலகம், இந்த நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் செந்தில்குமார் வீடு ஆகிய இடங்களிலும் இன்று 4–வது நாளாக சோதனை நடந்து வருகிறது. சிங்காநல்லூரில் உள்ள தி.மு.க. பிரமுகர் எஸ்.எம்.சாமி வீட்டில் நேற்று சோதனை முடிந்தது. பின்னர் அவரை விசாரணைக்காக வருமானவரித்துறை அதிகாரிகள் அழைத்துச் சென்றனர்.

சென்னையில் உள்ள காசா கிராண்ட் மற்றும் அப்பாசாமி ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் இன்றும் வருமானவரிச் சோதனை நடந்து வருகிறது.




கோவை மாவட்டம் அன்னூர் தெற்கு பகுதி அ.தி.மு.க. அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகள் என 600 பேருக்குஒன்றியசெயலாளர்ஓ.எஸ்.சாய்செந்தில்தீபாவளிபரிசுகளைவழங்கினார். அருகில் மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் சரவணன், ஐ.டி. ஒன்றிய செயலாளர் வெங்கடேஷ், அண்ணா தொழிற்சங்க கே.ஜி. பழனியப்பன், சி.டி.சி. சிவக்குமார், மகளிர் அணி பாக்கியா, பத்மா, ராதா, கவுன்சிலர் சுமதி, டாக்டர் பானு சித்ரா ஆகியோர் உள்ளனர்.

### சமூக வலைதளங்களில்

# வைரலாகும் நடிகை ராஷ்மிகாவின் 'மார்பிங்' ஆபாச வீடியோ!

## அமிதாப்பச்சன் கடும் கண்டனம்!!

**சென்னை,நவ.6–** நடிகை ராஷ்மிகாவின் 'மார்பிங்' ஆபாச வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு நடிகர் அமிதாப் பச்சன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.





இந்திய சினிமாவில் முதல் தர நடிகைகள் வரிசையில் இருப்பவர் நடிகை ராஷ்மிகா மந்தனா. இவர் கன்னடத்தில் பார்ட்டி என்ற படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். அவரது இந்த முதல் படமே அவருக்கு பல விருதுகளை குவித்தது. அதைத் தொடர்ந்து தெலுங்கு, தமிழ் என பிற மொழி படங்களில் நடித்து வருகிறார். தமிழில் நடிகர் கார்த்தி கதாநாயகனாக நடித்த சர்தார் என்ற படத்தில் அறிமுகமானார். அதைத்தொடர்ந்து நடிகர் விஜய்யுடன் வாரிசு என்ற படத்தில் நடித்து பிரபலம் அடைந்தார். தேசிய விருது பெற்ற புஷ்பா என்ற படத்தில் தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுனுடன் ஜோடியாக நடித்துள்ளார்.

தற்போது இவர் ஆலியா பட்டின் கணவரும் பாலிவுட் நடிகருமான ரன்பீர் கபூருடன் இணைந்து அனிமல் என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் பாடல் காட்சி தற்போது வெளியாகி இருக்கிறது. அதில் ரன்பீர் கபூரும்,ராஷ்மிகா மந்தனாவும் லிப்லாக் அடிக்கும் காட்சி அதிகமாக இடம் பெற்றுள்ளது.

சமீபத்தில் நடிகை ராஷ்மிகா மந்தனா கவர்ச்சி ஆடையில் அனைவரையும் கவர்ந்திழுத்து வந்தார். தற்போது அவரை வைத்து 'மார்பிங்' செய்து கவர்ச்சி வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் அந்த அது ராஷ்மிகா மந்தனாவின் ஆபாச வீடியோ கிடையாது. நடிகை ஷாரா படேலின் உடலை வைத்து மார்பிங் செய்யப்பட்ட வீடியோ ஆகும்.

இதற்கிடையே ராஷ்மிகா மந்தனாவின் இந்த ஆபாச வீடியோ வெளியிடப்பட்டதற்கு திரையுலக பிரபலங்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சன் கடும் கண்டனம் தெரிவித்து எக்ஸ் இணையதளத்தில் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் இந்த 'மார்பிங்' ஆபாச வீடியோ வெளியிட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்எனகோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் 'மார்பிங்' செய்யப்பட்ட நடிகை ஷாரா படேலின் ஒரிஜினல் வீடியோவையும் வெளியிட்டுள்ளார்.



கோவை சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளிக்கு, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மேஜை, நாற்காலிகளை சட்டமன்ற உறுப்பினர் கே .ஆர். ஜெயராம் வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் வெள்ளிங்கிரி, கணேஷ் குமார் ,லிங்கராஜ், வட்டக் கழக செயலாளர் சேதுவராசு, கருப்புசாமி மற்றும் கழக நிர்வாகிகள்கலந்து கொண்டனர்.

# கள்ளக்காதலனுடன் சேர்ந்து கணவனை கொன்ற மனைவி!

## ஏலகிரி தொழிலாளியின் கொலையில் திடுக்கிடும் திருப்பம்!!

**வேலூர், நவ,6–** கள்ளக்காதலனுடன் சேர்ந்து கணவனை அடித்துமனைவிகொலை செய்தார். ஏலகிரி தொழிலாளியின் கொலை வழக்கில் இத்தகைய திடீர் திருப்பம்ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலைப்பகுதியில் புத்தூர் என்ற கிராமம் உள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்தவர் கோவிந்தராஜ் (வயது 47). கூலி தொழிலாளி. இவரது மனைவி காளீஸ்வரி. இவர்களுக்கு 6 வயதில் மகனும், 5 வயது வயதில் ஒரு மகளும் உள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 10 மணி அளவில் வெளியேசென்ற கோவிந்தராஜ் வீடு திரும்பவில்லை.



கோவிந்தராஜ்



காளீஸ்வரி

நேற்று காலை வீட்டின் அருகேஉள்ளஒருபழைய கட்டிடத்தில் முன்பு அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் பிணமாகக் கிடந்தார். இது குறித்த தகவல் கிடைத்ததும்திருப்பத்தூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான் அங்கு நேரில் வந்து விசாரணை நடத்தினார். அதை தொடர்ந்து ஏலகிரி போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். அவர் ஏன் கொலை செய்யப்பட்டார் என தெரியவில்லை.

இதற்கிடையே போலீசாருக்கு கோவிந்தராஜன் மனைவி காளீஸ்வரியின் மீதுசந்தேகம் ஏற்பட்டது. ஏனெனில் காளீஸ்வரிக்கும் அதே ஊரை சேர்ந்த பொன்னுசாமியின் மகன் கோவிந்தராஜ் (36) என்பவருக்கும் கடந்த 5 வருடங்களாக கள்ளக்காதல் இருந்து வருகிறது. இது பற்றி அறிந்ததும் கோவிந்தராஜ் தனது மனைவி காளீஸ்வரியை கண்டித்தார். ஆனால் அவர் காதலை கைவிடவில்லை. பொன்னுசாமி மகன் கோவிந்தராஜுடன் தொடர்ந்து கள்ளக்காதலில் ஈடுபட்டு வந்தார். இதுகுறித்து ஊர் பெரியவர்களிடம் பஞ்சாயத்து பேசப்பட்டது. அவர்கள் காளீஸ்வரியை கண்டித்து இனி இது போல் நடந்து கொள்ளக் கூடாது என அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர்.

ஆனால் அவர் தொடர்ந்து தனது கள்ளக்காதலனை சந்தித்து வந்தார். எனவே காளீஸ்வரியை போலீசார் தங்கள் பாணியில்துருவித்துருவி கிடுக்குப் பிடி விசாரணை நடத்தினார்கள். விசாரணையில் அவர் தனது கள்ளக்காதலுடன் சேர்ந்து கணவர் கோவிந்தராஜை அடித்து கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

இது குறித்து காளீஸ்வரி அளித்துள்ளவாக்குமூலத்தில் கூறியிருப்பதாவது:

நான் பொன்னுசாமியின் மகன் கோவிந்தராஜ் என்பவருடன் கள்ளக்காதல் ஈடுபட்டு வந்தேன். அதை எனது கணவர் கண்டித்தார். இருந்தும் நான் தொடர்ந்து அவரை சந்தித்து வந்தேன்.

இந்த நிலையில் கொலை நடந்த நேற்று முன்தினம் இரவு நான் கள்ளக்காதலனை சந்திப்பதற்காக வீட்டிலிருந்து வெளியே சென்றேன். அப்போது எனது கணவர் எனக்கு தெரியாமல் என்னை பின்தொடர்ந்து வந்திருக்கிறார். நாங்கள் இருவரும் கொலை நடந்த பழைய கட்டிடத்திற்குள் உல்லாசமாக இருந்தோம்.

அதை அவர் நேரில் பார்த்து விட்டார். இதனால் செய்வதறியாது திகைத்த நான் அருகில் கிடந்த செங்கல்லை எடுத்து எனது கணவரின் தலையில் ஓங்கி அடித்தேன். அதில் அவர் ரத்தம் சொட்ட சொட்ட மயங்கி விழுந்தார். உடனே எனது கள்ளக்காதலன் கோவிந்தராஜ் அருகில் கிடந்த மண்வெட்டியை எடுத்து எனது கணவரை சரமாரியாக வெட்டினார். இதனால் அவர் அதே இடத்தில் துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார்.

பின்னர் நாங்கள் இருவரும் அவரின் பிணத்தை அந்த கட்டிடத்திற்கு வெளியே தூக்கி போட்டுவிட்டு ஒன்றும் நடக்காது போல் வந்து விட்டோம். பின்னர் சிறிது நேரம் கழித்து எனது கணவரை காணவில்லை என நான் அக்கம் பக்கத்தில் தெரிவித்தேன். மேலும் அவர்களுடன் சேர்ந்து நானும் அவரை தேடுவது போல் நடித்தேன். ஆனால் போலீசார் என்னிடம் விசாரணை நடத்தி உண்மையை தெரிந்து கொண்டனர். இவ்வாறு வாக்குமூலத்தில் அவர் கூறியுள்ளார்.

அதைத் தொடர்ந்து காளீஸ்வரியையும் அவரது கள்ளக்காதலன் பொன்னுசாமி மகன் கோவிந்தராஜையும் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். கள்ளக்காதல் விவகாரத்தி ல் தனது கணவரையே மனைவி கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தினந்தோறும்
சினிமா செய்திகள்
வெளிவரும்

# அ.தி.மு.க., பா.ம.க. ...

1–ம் பக்கத் தொடர்ச்சி

போது ஒன்று என்று இல்லை. இது திமுக பிரச்சினை மட்டும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

கேள்வி: சனாதன மாநாட்டில் பேசியதற்கு உயர் நீதிமன்ற நீதிபதி கருத்து தெரிவித்துள்ளாரே?

அம்பேத்கர், பெரியார், பேசியதை விட தவறாக ஒன்றும் பேச வில்லை நான் பேசியது தவறு இல்லை. அமைச்சர் பதவி இன்று வரும் நாளை போகும், முதலில் மனிதனாக இருக்க வேண்டும்.

6 வருடங்களாக நீட் தேர்வு விலக்கு வேண்டும் என்று கோரிக்கை வைத்து சட்டமன்றத்தில் பேசி வருகிறோம். மாணவர்களை குழப்பும் எண்ணம் இல்லை.

கேள்வி: இலங்கையில் முதலமைச்சர்காணொலி ஒளிபரப்பவில்லை?

பதில்: அதற்கு முதலமைச்சர் பதில் சொல்வார். முதலமைச்சருக்கு இரண்டு நாட்கள் காய்ச்சல் இருந்தது. நாளை அ னே க ம ா க நிகழ்வுகளில் பங்கேற்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.




உடுமலை தாலுகா வாக்குச்சாவடிகளில் வாக்காளர் சிறப்பு முகாம் நடந்தது. இதை தாசில்தார் சுந்தரம் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் துணைதாசில்தார் சையது ராபியம்மாள் உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளனர்.

# திரையில் சாதித்ததை, நீங்கள் அரசியலிலும் சாதிக்க முடியும்!

## கமல்ஹாசனுக்கு நடிகர் சிவகுமார் பிறந்த நாள் வாழ்த்து!!

**சென்னை நவ,6–** அமெரிக்கா கொண்டாடிய ஆப்ரஹாம் லிங்கனே இரண்டு முறை தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த பின்னரே அதிபரானார். அரசியலிலும், திரையில் சாதித்ததை, நீங்கள் சாதிக்க முடியும்.என நடிகர் சிவகுமார், கமல் ஹாசனுக்கு விடுத்துள்ள பிறந்தநாள் வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.



மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும்,நடிகருமான கமல்ஹாசன் 68 வது பிறந்தநாள் விழா சென்னையில் வருகிற 7ந்தேதி மாலை 3 மணிக்கு சென்னை,நீலாங்கரையில் உள்ள ஆர்.கே. கன்வென்சன் அரங்கில் கொண்டாடப்படுகிறது. இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து அக்கட்சியின் நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொள்கிறார்கள். இந்நிலையில் அவருக்கு நடிகர் சிவகுமார் தனது சமூக வலைதள பக்கத்தில் தனது பிறந்த நாள் வாழ்த்துகளை பதிவிட்டுள்ளார். அதில் நடிகர் சிவகுமார் கூறியுள்ளதாவது, "நடிப்புக் கலையில் அசகாய சூரர்கள் என்று நான் மதித்துப் போற்றுபவர்கள் தமிழ்ச் சினிமாவில் நடிகர் திலகம் சிவாஜியும், உலக நாயகன் கமலும்தான். அவர்கள் செய்த 'வெரைட்டி ரோல்களை' இதுவரை வேறுயாரும் செய்ய முடியவில்லை. சிவாஜி நடித்த சரித்திர, சமூக, புராண வேடங்களை யாரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவு அவர் செய்து விட்டார். கமல், நீங்கள் நடிப்பதோடு நில்லாமல், தேர்ந்த பரதக்கலைஞர், நடனக் கலையில் வல்லவர்,பாடகர், திரைக்கதை ஆசிரியர், இயக்குநர், தயாரிப்பாளர்..'டூப்' போடாமல் அல்லாவுதீனும் அற்புத விளக்கும் படத்தில் நீங்கள் சிங்கத்தோடு மோதியவர்..'மீண்டும் ஒரு சூர்யோதயம்' படத்தில் ரன்வே ரோட்டில் பாய்ந்து ஓடிய குதிரை சறுக்கி கீழே விழ 20அடி தூரம் குதிரையின் அடியில் உங்கள் கால் மாட்டி எலும்பு நொறுங்க நடித்தவர் நீங்கள். 1973ல் அரங்கேற்றம், சொல்லத்தான் நினைக்கிறேன் என்று துவங்கி தங்கத்திலே வைரம், மேல் நாட்டு மருமகள் என 8 படங்களில் நாம் இருவரும் சேர்ந்து நடித்தோம். நான் கதாநாயகன், கமல், நீங்கள் பெரும்பாலும் வில்லனாக நடித்தீர்கள்.. வில்லன் வேடங்களில் நடித்து பெரிய ஹீரோவாக எங்கள் தலைமுறையில் உயர்ந்த முதல் நடிகர் நீங்கள் தான் கமல். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது போல உங்களுக்குள் இருந்த 'பொறி'யை கண்டவன் நான்.அந்தச்செடிவளர்ந்து இன்று விருட்சமாகி 'நாயகன்','குணா', 'அன்பே சிவம்', 'ஔவை சண்முகி', 'ஹேராம் ' என்று நடிப்பின் இமயத்தைத் தொட்டுள்ளது.

நடிப்பில் இனி சாதிக்க உங்களுக்கு எதுவும் மிச்சம் இருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் களம் உங்களுக்காக காத்திருக்கிறது.அமெரிக்கா கொண்டாடிய ஆப்ரஹாம் லிங்கனே இரண்டு முறை தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த பின்னரே அதிபரானார். அரசியலிலும், திரையில் சாதித்ததை, நீங்கள் சாதிக்க முடியும்.. துணிந்து இறங்குங்கள்.நூறாண்டு நீவிர் வாழ்க இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார் நடிகர் சிவகுமாரின் வாழ்த்து செய்தி சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

14 இந்தியத் தொழிலாளர்களையும் சில சிங்களத் தொழிலாளர்களையும் வைத்து காப்பித் தோட்டம் தொடங்கினார். இது இலங்கைப் பொருளாதாரத்தில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியது.

காப்பித் தோட்டங்கள் பெருகப்பெருக இந்தியத் தொழிலாளர்கள் ஏராளமாக இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காப்பி தோட்டத்தையடுத்து தேயிலைத் தோட்டங்கள் அதிகமானது. அதனையும் மலையகத் தமிழர்கள் வளப்படுத்தினார்கள். பின்னர் ரப்பர், தென்னை என அனைத்துப் பணப் பயிர்களது உற்பத்தியும் மலையகத் தமிழர்களது உழைப்பால் உருவானது தான்.

இலங்கை நாட்டுக்காக தங்களது உழைப்பை வழங்கியவர்கள் மலையகத் தமிழர்கள். இலங்கை நாடு உயர உழைத்தவர்கள். தங்களது ரத்தத்தையும் வியர்வையையும் காலத்தையும் கடமையையும் அந்த நாட்டுக்காகவே ஒப்படைத்தவர்கள்.

மலையகதமிழர்களின் குழந்தைகளின்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் போல கல்வியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் அவர்கள் மேலெழும்பும் காலத்தை எதிர்நோக்கி தமிழ்நாடு காத்திருக்கிறது. கல்வி, சுகாதாரம், வாழிட உரிமைகள், பொருளாதார உதவிகள், சமூகஉரிமைகள்அனைத்தும் வழங்கப்பட வேண்டும். நாட்டை வாழவைத்த மக்களை வாழவைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதற்காக தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாடு என்றும் குரல் கொடுக்கும்" என்று முதல்வர் ஸ்டாலின் உரையில் குறிப்பிட்டிருந்தார்.

முதல்வரின் உரை ஊடகங்கள் மற்றும் ஏடுகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் நவம்பர் 3 ஆம் தேதி கொழும்பில் நடைபெற்ற மேற்கண்ட விழாவில்தமிழ்நாடு முதலமைச்சர்முகஸ்டாலின் அவர்களின் காணொலி உரையை ஒளிபரப்ப கூடாது என்று ஒன்றிய பாஜக அரசு தடை போட்டு விட்டது என இன்று வெளியான இந்து ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டு இருக்கிறது.

இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கே மற்றும் பிரதமர் உள்ளிட்டோர் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் இந்திய அரசின் சார்பில் ஒன்றிய நிதி அமைச்சர்நிர்மலாசீதாராமன் கலந்து கொண்டார். தமிழ்நாடு பாஜகதலைவரும் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாட்டு மக்களின் சார்பில் வாழ்த்துரை வழங்கி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அனுப்பிய காணொலி உரையை அந்த விழாவில் ஒளிபரப்ப தடை விதித்ததன் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சிறுமைப்படு த்துவதற்கு முயன்றுள்ள ஒன்றிய பாஜகஅரசின்செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது கடும் கண்டனத்துக்குரியது. இவ்வாறு வைகோ கூறியுள்ளார்.

ஏர்டெல்லிலிருந்து ஜியோவுக்கு மாறியதால்

# மாநில மொழியை தேர்ந்தெடுக்கும் வசதியில் ஏற்பட்ட தடங்கல் சரிசெய்யப்பட்டது!

## இந்தியன் ஆயில் நிறுவனம் தகவல்!!

சென்னை, நவ.6

ஏர்டெல்லிலிருந்து ஜியோவுக்கு மாறியதால் இன்டர் ஆக்டிவ் வாய்ஸ் ரெஸ்பான்ஸ் சிஸ்டத்தில் மாநில மொழியை தேர்ந் தெடுக்கும் வசதியில் ஏற் பட்டிருந்த தடங்கல் சரி செய்யப்பட்டுவிட்டது என்று இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக இந்தி யன் ஆயில் தலைமை பொது மேலாளர் வி. வெற்றி செல்வகுமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்தியாவின் முன்னணி எரிசக்தி நிறுவனங்களில் ஒன்றான இந்தியன் ஆயில் நிறுவனம் ஏர்டெல்லிலி ருந்து ஜியோவிற்கு மாறிய தால் இன்டர்ஆக்டிவ் வாய்ஸ் ரெஸ்பான்ஸ் சிஸ் டத்தில் மாநில மொழி தேர்வு வசதியில் சிறு தடங் கல் ஏற்பட்டது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கி றோம்.

தற்காலிகமாக நிகழ்ந்த இந்த மாற்றத்தின்போது எங்களது சிஸ்டத்தில் உங்க ளுக்கு விருப்பமானமொழி விபரங்கள் பதிவேற்றம் செய்யப்படும் வரை ஆங்கி லம் மற்றும் இந்தி மொழி தேர்வுகளை மட்டுமே நீங் கள் பெற முடிந்தது. இது உங்களுக்கு அசவுகரி யத்தை ஏற்படுத்தியிருக் கும் என்பதை அறிகிறோம்.

இந்த பிரச்சினைக்கு வெற்றிகரமாகதீர்வுகாணப் பட்டுவிட்டது எங்களது ஐ.வி.ஆர்.எஸ். சிஸ்டம் இப்போது தானாகவே மாநில மொழிகள் மற்றும் விருப்பமான மொழித் தேர்வு அமைப்புகளுடன் கூடிய வசதியை வாடிக்கை யாளர்கள் தடையின்றி பெறலாம் என்பதையும் உறுதி செய்கிறோம்.

எல்.ஜி.பி. சிலிண்டர் மின்பதிவு வசதியை தமிழ் மொழியிலும் பெறலாம் என்ற தகவலுடன், பலதரப் பட்ட மொழிகளைப் பேசும் வாடிக்கையாளர்க ளுக்கும் உதவும் வகையில் பல மாநில மொழித்தேர்வு களுடன் இந்த வசதி வழங் கப்பட்டுள்ளது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு

அனைத்து இயலக்கூடிய வழிகளிலும் சேவையளிப் பதில் முனைந்து செயல்ப டுகிறோம் என்பதுடன் எங் கள் சேவைகள் உங்களுக்கு வசதியாகவும் சவுகரியமாக வும் இருப்பதையும் உறுதி செய்கிறோம். இந்த சேவை மாற்றத்தின் செயலாக்கத்தி னால் உங்களுக்கு ஏதே னும் அசவுகரியம் ஏற்பட்டி ருந்தால் அதற்கு மிகவும் வருத்தம் தெரிவித்துக் கொள்வதுடன் எங்கள் சேவைகளின் மீது நீங்கள் வைத்துள்ள இடைவிடாத நம்பிக்கைக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரி வித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



கோயம்புத்தூர் காந்திபுரம் சிறைச்சாலை வளாகத்தில் ரூ.172.25 கோடி மதிப்பீட்டில் செம்மொழி பூங்கா அமைய உள்ள இடத்தில் பணிகள் துவங்குவதற்கு பூர்வாங்கு பணி மேற்கொள்வது குறித்து மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாநகராட்சிதுணைஆணையாளர்கள்செல்வசுரபி, சிவகுமார், மநகரப்பொறியாளர்(பொ) முருகேசன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

கோவையில்

# தி.மு.க. பெண் நிர்வாகி வீட்டில் 4-வது நாளாக வருமானவரி சோதனை!

கோவை, நவ.6–

கோவையில் வருமான வரித்துறை அதிகாரிகள் நான்காவது நாளாக சோதனை நடத்தி வரு கின்றனர். தமிழக பொது ப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவிற்கு தொடர் புடைய இடங்களில் வரு மான வரித்துறை அதிகாரி கள் சோதனை மேற்கொ ண்டனர். அதன் தொடர்ச் சியாக கோவை ராமநாதபு ரம், நஞ்சுண்டாபுரம் ரோட்டில் உள்ள பார்சன் குடியிருப்பு வளாகத்தில் வசித்து வரும் தி.மு.க., கலை இலக்கிய பகுத்த றிவு பிரிவு மாநில துணை செயலாளர் மீனா ஜெயக் குமார் வீட்டில் வருமான வரித்துறை அதிகாரிகள் நான்காவது நாளாக சோத னை நடத்தி வருகின்ற னர். அதேபோல சவுரிபா ளையத்தில் செயல்பட்டு வரும் மீனா ஜெயக்குமா ரின் மகன், ஸ்ரீராமுக்கு சொந்தமான அலுவலகத் திலும், சவுரிபாளையத் தில் உள்ள பிரபல கட்டு மான நிறுவனமான காசா கிராண்ட் நிறுவனத்தின் அலுவலகத்திலும், சிங்கா நல்லூர் கள்ளிமடையில் உள்ள காசா கிராண்ட் நிறு வனத்தின் முன்னாள் இயக்குனர் செந்தில்கு மார் வீட்டிலும் அதிகாரி கள் நான்கா வது நாளாக சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறைந்த விலையில்

# மாட்டு தீவன பயிர்களை அறுக்கும் எந்திரம் கண்டுபிடிப்பு!

## பொறியியல் பட்டதாரிக்கு பாராட்டு!!

பெ.நா.பாளையம், நவ.6–

பெரியநாயக்கன்பாளை யத்தைச் சார்ந்த இயற்கை வேளாண் விவசாயி சிறு குறு விவசாயிகள் பயன டையும் வகையில் குறைந்த விலையிலான தீவனம் அறுக்கும் இயந்தி ரத்தை வடிவமைத்து விவ சாயிகளின் பாராட்டை




பெற்றுள்ளார்.

பெரியநாயக்கன்பாளை யத்தில் உள்ள ஜோதிபு ரத்தை சார்ந்தவர் தீரஜ் ராம கிருஷ்ணா (29). இவர் இயற்கை வேளாண்மை மீது பற்று கொண்டு இயற்கை வேளாண்மை மற்றும் நாட்டு கால்நடை களை வளர்க்கும் பணி களை ஈடுபட்டு வருகி றார். நாட்டு பசு இனங்க ளைப் பாதுகாக்கும் வகை யில் மாட்டுப் பண்ணை அமைத்து அவற்றை வளர்த்தும் வருகிறார். இதற்காக கடந்த சில

ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசு இவருக்கு சிறந்த விவசாயிக்கான விருது வழங்கி கௌரவித் தது குறிப்பிட த்தக்கது.

இந்நிலையில் தற்போது அவர்சிறுகுறுவிவசாயிகள் பயன்படுத்தும் வகையில் குறைந்த விலையிலான தீவனம் அறுக்கு.ம் இயந் திரத்தை வடிவமைத்துள் ளார்.

குறைந்த அளவில் மாடு கள் வளர்ப்போர் விரும் பிய இடத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் உள்ள இந்த இயந்திரமானது 1 ஹெச்.பி மோட்டார், பிளேடு மற்றும் பிரேம் ஆகியவை கொண்டு வடி மைக்கப்பட்டுள்ளது. 1மணி நேரத்தில் 500 கிலோ பசுந்தீவனங்களை வெட்டக்கூடிய திறன் படைத்தது.

கால்நடைகள் விரும்பி சாப்பிடும் வகையில் சிறு சிறு துண்டுகளாக பசுந்தீவ னங்களை வெட்டும் வல் லமை கொண்டது. எளிதாக பராமரிக்க முடி யும். கையாளுவதற்கு எளி மையான முறையில் வடி வமைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரத்தின்

விலை அனைத்து வரியி னங்கள் உட்பட ரூ. 10 ஆயிரம் ஆகும். இதனை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். பழுத டைந்தாலும் அவர்களே சரி செய்து கொள்ளக் கூடிய வகையில் அமைந் துள்ளது. இந்த இயந்திரத் தில் கோ 4, கோ 5, 5 நேப் பியர், சூப்பர் நேப்பியர் பசுந்தீவனங்கள் மற்றும் மல்பரி, வாழைக்கன்று கள் போன்றவற்றை வெட்ட முடியும்.

அனைத்து வகை விவசா யிகளும் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ள இந்த தீவனம் அறுக்கும் இயந்திரம் விவ சாயி களிடையே தற் போது பெரும் வரவே றப்பை பெற்றுள்ளது.

Published by S.N.Selvam on behalf of M/s. Chennai Murasu Pvt. Ltd. from Kovai Malai Murasu Achagam, No.292, old No.1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore-641 006. Tamil Nadu and printed by N.Durai Prakash at Kovai Malai Murasu Achagam, No.292, old No.1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore-641006, Tamil Nadu. Editor:S.N.Selvam.



ஈரோடு இடைத்தேர்தல் பிரச்சாரத்தின் போது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் குறித்து பேசியது தொடர்பாக சீமான் மீது வழக்கு தொடரப்பட்டது. இதுதொடர்பாக அவர் இன்று ஈரோடு கோர்ட்டில் ஆஜரானார்.

சீமான், கே.பி. அன்பழகன் உட்பட

# முக்கிய தலைவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர்!

சென்னை, நவ.6

சீமான், சி.வி.சண்மு கம் உட்பட முக்கிய தலைவர்கள் இன்று பல் வேறு வழக்கு தொடர் பாக நீதிமன்றங்களில் ஆஜராகினர். ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் பிரசாரத் தின்போது குறிப்பிட்ட சமூகத்தை அவதூறாகப் பேசிய வழக்கில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கி ணைப்பாளர் சீமான் மீது எஸ்.சி. எஸ்.டி. வன்கொ டுமை தடுப்புச் சட்டம் உட்பட 4 பிரிவுகளின்கீழ் ஈரோடு கருங்கல் போலீ சார் வழக்குப் பதிவு செய் திருந்தனர். இந்த வழக்கு ஈரோடு மாவட்ட முதன்மை அமர்வு நீதி மன்றத்தில் இன்று விசார ணைக்கு வந்தது. அப் போதுசீமான்ஆஜரானார். பின்னர் இந்த வழக்கை 20–ஆம் தேதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி முருகே சன் உத்தரவிட்டார்.

**கே.பி. அன்பழகன்**

சொத்துகுவிப்பு வழக் கில் முன்னாளர் அமைச் சர் அன்பழகன் தர்மபுரி கோர்ட்டில் இன்று குடும் பத்தினருடன் ஆஜரா னார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர். கே.பி. அன்ப ழகன் மீது வருமானத் திற்கு அதிகமாக சொத் துக்களை வாங்கி குவித்தி ருப்ப தாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்து, அதற்கான பத்தா யிரம் பக்கங்கள் அடங் கிய குற்றப்பத்தி ரிக்கை யினை தருமபுரி நீதிமன் றத்தில் தாக்கல் செய்தி ருந்தனர், இதனை தொடர்ந்து நீதி மன்ற நடைமுறைகள் தொடங் கியது, முறையாக சம் மன் அனுப்பப்பட்ட நிலையில் குற்றம் சாட் டப்பட்டிருக்கும் அ.தி. மு.க. முன்னாள் அமைச் சர் கே.பி.அன்பழகன், அவரது மனைவி மல் லிகா, மகன்கள் சசிமோ கன், சந்திரமோகன், உற வினர்கள், சரவணன், சரவணக்குமார், மாணிக் கம், தனபால் உள்ளிட்ட பதினொரு பேரும் தர்ம புரிநீதி மன்றத்தில் இன்று ஆஜரானார்கள்.

கடந்த 2022–ஆம் ஆண்டு ஜனவரி 19 ம்தேதி கே.பி.அன்பழ கன் மற்றும் அவருக்கு தொடர்புடைய, 58 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை மேற்கொண்ட னர், வருமானத்திற்கு அதிகமாக 45 கோடியே 20 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் அளவிற்கு சொத் துக்களை வாங்கி குவித்தி ருப்பதாக, லஞ்ச ஒழிப்பு போலீசார் கண்டுபிடித்தி ருந்தனர்.

**சி.வி. சண்முகம்**

தமிழ்நாடு அரசு மற் றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோரை அவதூறாகப் பேசியதாக தொடரப்பட்ட வழக்கில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்மு கம் இன்று விழுப்புரம் நீதிமன்றத்தில் ஆஜரா னார். இந்த வழக்கை வரும் 21–ஆம் தேதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி பூர் ணிமா உத்தரவிட்டார்.

**மு.க. அழகிரி மகன்**

கிரானைட் குவாரி மூலம் ரூ.257 கோடி அர சுக்கு இழப்பு ஏற்படுத் திய வழக்கில் மதுரை சிறப்பு நீதிமன்றத்தில் மு.க. அழகிரி மகன்துரை தயாநிதி இன்று ஆஜரா னார். இந்த வழக்கை 24– ஆம் தேதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

கோவையில்

# உறுப்புகளை தானம் செய்தவரின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை!

சரவணம்பட்டி, நவ. 6–

கோவை கணபதி மோர் மார்க்கெட் பகுதி ராம சாமி முதலியார் வீதியை சேர்ந்தவர் தம்பு என் கின்ற ரங்கராஜ்(52) ,இவர் அதே பகுதியில் பேன்சி கடை நடத்தி வரு கிறார்.

இவருக்கு கோகுல வாணி என்ற மனைவி யும் இரண்டு மகள்களும் உள்ளனர் சம்பவத்தன்று வழக்கம்போல் கடை யில் விற்பனை செய்து வந்த ரங்கராஜுக்கு திடீ ரென தலைவலிப்பதாக கூறி வாந்தி எடுத்துள் ளார். இதனை தொடர்ந்து இவ ரை அருகில் இருந்த ராமகிருஷ்ணா தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள் ளனர்.



அங்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் ரங்க ராஜ்மூளைச்சாவுஅடைந் துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் ரங்கராஜன் உடலுறுப்பு களை தானம் செய்ய முன் வந்தனர். இதனைத் தொடர்ந்து அவரது கண் கள் மற்றும் கல்லீரல் ஆகிய உடல் உறுப்புகள் பிறருக்கு தானமாக வழங் கப்பட்டது. உடல் உறுப் புகளை தானம் செய்ததற் காக ரங்கராஜன் குடும்பத்தினரை பொது மக்கள் கண்ணீரோடு பாராட்டினர்.

மேலும் உடல் உறுப்பு களை தானம் செய்தவர்க ளின் உடலை அரசு மரி யாதை உடன் அடக்கம் செய்யப்படும் என தமி ழக அரசு அறிவிப்பு வெளியிட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து கோவை வடக்கு கோட் டாட்சியர்பி.கே.கோவிந் தன், வடக்கு தாசில்தார் தங்கராஜ், கணபதி வரு வாய் அலுவலர் வெண் ணிலா, ஆகியோர் தமி ழக அரசின் சார்பில் ரங்கராஜனின் உடலுக்கு மலர்களையும் வைத்து மரியாதை செலுத்தினர், பின்பு அவரது உடல் தக னம் செய்யப்பட்டது.

தினந்தோறும்
சினிமா செய்திகள்
வெளிவரும்



டாக்டர் எம்ஜிஆர் அமைப்பு சாரா கட்டுமான பொது தொழிலாளர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா செல்வபுரம் அலுவலகத்தில் கட்டுமான தொழிற்சங்க மாவட்ட தலைவர் கன்மலை ஆர்.முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட இலக்கிய அணி செயலாளர் டி.லட்சுமிகாந்தன், கட்டுமான தொழிற்சங்க பொது கூட்டமைப்பு செயலாளர் குரு நாகலிங்கம், முகமது ரபிக், ஏ.கே.ஆர். வெங்கடேசன், ரங்கசாமி, விஜயலட்சுமி, மஞ்சுளா, சேகர், ஜெய்ஸ்ரீ, யமுனா, ஹரி, சித்ரா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முதலமைச்சர் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல்!

## போதை ஆசாமி கைது!!

ஊட்டி, நவ.6–

நீலகிரி மாவட்டம் உதகை அருகே உள்ள தாம் பட்டி அண்ணா நகர் பகுதி யில் வசித்து வருபவர் கணேசன் வயது (41). திரு மணம் ஆகி 5 மாதத்தி லேயே மனைவி உயிரி ழந்த நிலையில் வீட்டில் தனியாக வசித்து வந்துள் ளார்.

இந்நிலையில் கிராமப் பகுதியில் கூலி வேலை செய்து வரும் கணேசன் நாள்தோறும் மது அருந்து வதை வழக்கமாக கொண் டும் மது போதையில் 108 ஆம்புலன்ஸ் அவசர சேவை மையத்திற்கு அழைத்து தனக்கு உடல் நிலை சரியில்லை தன்னை ஆம்புலன்ஸ் மூலம் மருத் துவமனைக்கு அழைத்து செல்லுமாறு மது போதை யில் தொடர்பு கொள் வதை வழக்கமாகக் கொண்டுள்ளதாக கூறப்ப டுகிறது.

அதேபோல் நேற்று மாலை தனக்கு உடல் நிலை சரியில்லை தன்னை ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறிய போது ஆம்புலன்ஸ் வாகனம் அனுப்ப முடி யாது என கட்டுப்பாட்டு மையத்தில் கூறியதால் தமிழக முதலமைச்சரின் இல்லம் உட்பட 7 இடங் களில் வெடிகுண்டு வைக் கப்பட்டுள்ளதாக 108 அவ சர சேவை மையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளார்.

உடனடியாக அவசர சேவை மையத்திலிருந்து சென்னை தலைமை காவல்துறை கட்டுப் பாட்டு மையத்திற்கு புகார் அளித்ததன் அடிப்படை யில் நீலகிரி மாவட்ட காவல்துறை சார்பில் தொலைபேசி எண்ணை வைத்து விசாரணை மேற்கொண்டதில் உதகை அருகே உள்ள தாம்பட்டி அண்ணா நகர் பகுதியில் வசித்து வரும் கணேசன் என்பது தெரியவந் துள்ளது.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற காவல் துறையினர் கணேசனை கைது செய்து வழக்கு பதிவு செய்து லவ்டேல் b2 காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின் றனர்.

காவல்துறையினரின் முதற்கட்ட விசாரணையில் தான் மது போதையில் 108 ஆம்பு லன்ஸ் அவசர சேவை மையத்திற்கு அழைத்து தொடர்பு கொண்டதாக கூறியுள்ளதாகவும் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக காவல்துறையினர் தெரி வித்துள்ளனர், இச்சம்ப வம் உதகையில் பரப ரப்பை ஏற்படுத்தியது.

நீலகிரி மாவட்டத்தில்

# மாஸ்டர் பிளான் சட்டம் மாற்றியமைக்க வேண்டும்!

## சிவில் பொறியாளர்கள் சங்கம் வலியுறுத்தல்!!

உதகை, நவ.6–

நீலகிரி மாவட்டத்தில் மாஸ்டர் பிளான் சட் டத்தை மாற்றியமைக்க வேண்டும் என நீலகிரி சிவில் பொறியாளர்கள் சங்கம் வலியுறுத்தி உள் ளது. நீலகிரி மாவட்ட சிவில் பொறியாளர்கள் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது.

இதில், சங்கத்தின் தலை வராக ஆர்.சி.திலக்குமார் பொறுப்பேற்றார்.

செயலாளராக வி.எஸ். மாதேஸ்ராஜனும், பொரு ளாளராக கே.எஸ்.ஹரிஹ ரஜ் பொறுப்பேற்றனர்.

உதகை நகராட்சி ஆணையர்ஏகராஜ்சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, சிவில்பொ றியாளர்களுக்கு அங்கீகா ரம்பெற்ற சான்றிதழ் மற் றும் நினைவுப்பரிசு வழங்கி கவுரவித்தார்.

சங்கத்தின் தலைவர் ஆர்.சி.திலக்குமார் மற் றும் நிர்வாகிகள் செய்தியா ளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு ஒருங்க ணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்மாவட்ட நிர்வாகத்தால்திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

மாவட்ட திட்டக்கு ழு வில் குறைந்தபட்சம் இ ரண்டு பரிந்துரைக்கப் பட்ட சிவில்பொ றியாளர்களை உறுப்பின ராக சேர்க்க வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கோத்த கிரி மாஸ்டர்பிளான்திருத் தம் மற்றும் மேம்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை 10 ஆண்டுக ளாக நிலுவையில் உள் ளது. 2016 மற்றும் 2021ம் ஆண்டுகளில் இச்சட்டம் மாற்றியமைத்திருக்க வேண்டும். நீலகிரி மாவட் டத்தில் அதிகரித்து வரும் மக்கள் தொகையால் இச் சட்டத்தை உடனடியாக மாற்றி அமைக்க வேண் டும்.

மாவட்டத்தில் கட்டிட அனுமதிக்கான காலம் ஓராண்டிலிருந்து 5 ஆண் டாக உயர்த்த வேண்டும்.

மேலும், தற்போது கட் டிடத்துக்கான அனுமதி பெறுவதில் பெரும் கால தாமதமாகிறது. இதனால் உள்ளூர் மக்கள் வீடுகள் கட்ட முடியாமல் அவதிய டைந்து வருகின்றனர். எனவே, கட்டிட அனும தியை உரிய நேரத்தில் வழங்க மாவட்ட நிர்வா கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒற்றைச் சாளர போர் டல் பயனுள்ள மற்றும் உகந்த வரிசைப்படுத் தலை வலியுறுத்துல் மற் றும் தேவையற்ற குழப்ப மான நகல் செய்முறைகளை நிராகரிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறி னார்.

# அரசு வேலை வாங்கி தருவதாக ரூ.20 லட்சம் மோசடி!

## 4 பேர் மீது வழக்கு!!

கோவை, நவ.6–

கோவை சௌரிபாளை யம் பகுதியைச் சேர்ந்தவர் ஆறுமுகம் என்பவரின் மகன் மாணிக்கம் (27). இவர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

இவருக்கு ஏற்கனவே அறிமுகமான ரஞ்சித், ஜெகன் ஆகியோர் அரசு வேலை வாங்கித் தருவ தாக கூறியிருக்கின்றனர். இதை நம்பிய மாணிக்கம் தனது நண்பர்கள் சிலரு டன் சேர்ந்து 20 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் கொடுத்துள்ளார். ஆனால் பணம் கொடுத்து பல நாட்கள் ஆகியும் அரசு வேலை கிடைக்க வில்லை. மேலும் கொடுத்த பணத்தை திருப்பி கேட்ட போது அவர்கள் பணத்தை கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளனர்.

இதை தொடர்ந்து மாணிக்கம் பீளமேடு போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் அரசு வேலை வாங்கி தருவதாக மோசடி செய்த ரஞ்சித், ஜெகன், மோகன், சூர்யா ஆகிய நான்கு பேர் மீது வழக்கு பதிவு செய்து விசா ரணை நடத்தி வருகின் றனர்.

# ஈஷாவின் மண் காப்போம் இயக்கம் சார்பில் பாரம்பரிய காய்கறி திருவிழா!

## 2000 விவசாயிகள் பங்கேற்பு!!

மதுரை, நவ.6–

ஈஷாவின் மண் காப்போம் இயக்கம் சார்பில் பாரத பாரம்பரிய காய்கறி திருவிழா மதுரையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. யாதவா மகளிர் கல்லூரியில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்ற விழாவில் தமிழ் நாடு முழுவதும் இருந்து




சுமார் 2000 விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் மற்றும் வேளாண் வல்லுநர்கள் கலந்து கொண்டு காய்கறி சாகுபடி குறித்து ஆலோசனைகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சி தொடர்பாக மண் காப்போம் இயக்கத்தின் தமிழக களஒருங்கிணைப்பாளர் திரு. முத்துகுமார் பேசுகையில் "இயற்கை முறையில் காய்கறிகளை விளைப்பது எப்படி? அதை மதிப்பு கூட்டுவது மற்றும் சந்தைப்படுத்துவது எப்படி என்பது தொடர்பாக இந்த விழாவில் பேசப்பட்டுள்ளது. மேலும் ரசாயன விவசாயத்துக்கு நிகரான மகசூலை இயற்கை முறையில் எடுப்பது எப்படி என்பதை வெற்றி பெற்ற முன்னோடி விவசாயிகள் இந்தநிகழ்ச்சியில்பகிர்ந்து கொண்டுள்ளனர்.

மேலும் ஐடி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருக்கும் ஏராளமான இளைஞர்கள் இயற்கை விவசாயத்திற்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள். ஆர்வம் இருக்கும் இளைஞர்கள் இயற்கை விவசாயியாக மாறும் வகையில், மூன்று மாத பயிற்சி ஒன்றை வடிவமைத்துள்ளோம். கோவையில் உள்ள ஈஷா மாதிரி விவசாய பண்ணையில் இந்த மூன்று மாத பயிற்சி நடைபெற இருக்கிறது. இயற்கை விவசாயத்தில் விருப்பம் உள்ள இளைஞர்கள் அங்கேயே தங்கி மூன்று மாதம் இந்த பயிற்சியை மேற்கொள்ளலாம்" என தெரிவித்தார்.

அத்துடன், இந்த நிகழ்ச்சியில் முன்னோடி விவசாயிகள் பலர் இயற்கை முறையில் உற்பத்தி செய்த பொருட்களை மதிப்புக் கூட்டி பொதுமக்களுக்காக விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதற்காக 40 க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் போடப்பட்டு அதில் பாரம்பரிய அரிசி, சிறு தானியம், தேன், கைவினைபொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. மேலும் நம் மரபு இசையை பேணி காக்க சவுண்ட் மணி அவர்கள் 80க்கும் மேற்பட்ட இசைக் கருவிகளை கொண்டு இசை நிகழ்ச்சி நடத்தினார்.

அதனை தொடர்ந்து வந்திருந்த அனைவருக்கும் படையல் சிவா குழுவினருடன் இணைந்து அடுப்பில்லாமல், எண்ணெய் இல்லாமல் ஆரோக்கியமான உணவு தயார் செய்து வழங்கப்பட்டது. இது மட்டுமின்றி பங்கேற்ற அனைவருக்கும் காய்கறி சாகுபடியை இயற்கை முறையில் செய்வது குறித்த கையேடும், பாரம்பரிய நாட்டு காய்கறி விதைகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

மேலும் விவசாயிகளே கண்டறிந்த எளிய வேளாண் கருவிகளின் கண்காட்சியும் இடம் பெற்றது.



கோவை காளப்பட்டியில் உள்ள டாக்டர் என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரியில் 23வது பட்டமளிப்பு விழா கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் விஞ்ஞானி டாக்டர் டி. எம் கோட்ரெஸ் மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி கவுரவித்தார்.

# என்.ஜி.பி.கலை கல்லூரியில் 23-வது பட்டமளிப்பு விழா!

கோவை, நவ.6–

கோவை காளப்பட்டியில் உள்ள டாக்டர் என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரியில் 23வது பட்டமளிப்பு விழா கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி தலைமை வகித்தார். டாக்டர் என்.ஜி.பி.கலை, அறிவியல் கல்லூரியின் செயலர் தவமணிதேவி பழனிசாமி, கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் மருத்துவர் அருண் பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் உயிரியல் பொறியியல் மற்றும் மின் மருத்துவ ஆய்வகத்தின் சிறந்த விஞ்ஞானி டாக்டர் டி. எம் கோட்ரெஸ், பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் இராமமூர்த்தி பட்டமளிப்பு உறுதிமொழியை வழங்கினார். விழாவில் மொத்தமாக 2076 இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள்பட்டம் பெற்றனர். என்.ஜி.பி. கல்வி குழுமங்களின் முதன்மைச் செயல் அலுவலர் ஓ.டி.புவனேஷ்வரன் , இயக்குனர் பெ.இரா.முத்துசாமி, கல்லூரியின் துணை முதல்வர் சா. சரவணன் மற்றும் பிற துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சாலையில் சென்ற சைக்கிளில்

# ஒளிரும் பட்டைகளை ஒட்டி போலீசார் விழிப்புணர்வு!

கோவை, நவ. 6–

போக்குவரத்து போலீஸ் சார்பில் சைக்கிளில் சென்றவர்களுக்கு இரவு நேரத்தில் ஒளிரும் பட்டைகளை, சைக்கிளை சுற்றிலும் ஒட்டி பாதுகாப்பாக செல்லுமாறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கோவை சிங்காநல்லூர் எஸ்.ஐ.எஸ்.எச்., காலனியை சேர்ந்தவர் சிதம்பரம்( 75). இவர் கடந்த, 3ம் தேதி அதிகாலை சிங்காநல்லூர் உழவர் சந்தை அருகில் உள்ள யு டேர்னில் திரும்பும் போது, அந்த வழியாக வந்த லாரி, அவர் மீது மோதியது.

அதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அதிகாலை நேரத்தில் அவர் ஓட்டிச் சென்ற சைக்கிளில், இரவு நேரத்தில் ஒளிரும் பட்டைகள் பொருத்தப்படாததே விபத்திற்கான காரணம் என விசாரணையில் தெரிந்தது.

இந்த விபத்தை தொடர்ந்து கோவை மாநகர கமிஷனர் பாலகிருஷ்ணன் உத்தரவு படி, போக்குவரத்து துணை கமிஷனர் ராஜராஜன் மேற்பார்வையில், மாநகர போக்குவரத்து போலீசார் சார்பில், அனைத்து போலீஸ் எல்லைக்குட்ட பகுதியிகளிலும், சைக்கிளை ஓட்டிச் சென்றவர்களுக்கு இரவு நேரத்தில் ஒளிரும் பட்டைகள், சைக்கிளை சுற்றிலும் ஒட்டப்பட்டு பாதுகாப்பாக செல்லுமாறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் இரவு நேரங்களில் சைக்கிள்களில் செல்வோர் கண்டிப்பாக சைக்கிளின் முன்பு றம், பின்புறம் மற்றும் பக்கவாட்டில், இரவு நேரத்தில் ஒளிரும் பட்டைகளை பொருத்திக் கொண்டு செல்ல வேண்டும் என கோவை மாநகர போலீஸ் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



தொடர் மழையால் வீடு இடிந்து தனியார் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களை நேரில் சந்தித்து மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ் ஆறுதல் கூறினார்.

# கோவை வ.உ.சி. பூங்காவில் உள்ள உயிரினங்கள் இடமாற்றம்!

## எஸ்.பி.வேலுமணி கண்டனம்!!

கோவை, நவ.6–

முன்னாள் அமைச்சர் எஸ். பி. வேலுமணி விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழகத்தில், கோவை மாநகரின் மையப்பகுதியான காந்திபுரத்தில் அமைந்துள்ள வ.உ.சி பூங்கா என பூங்காவை அழைக்கபடும், வ.உ.சிதம்பரனார் மேம்படுத்த மாநகராட்சி அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாததால், கடந்த ஆண்டு இதன் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு, அதன் தொடர்ச்சியாக இங்குள்ள உயிரினங்கள் இடமாற்றம் செய்யப்பட்டு வருவது, கடும் கண்டனத்திற்கு உரியதாகும். மேலும், கோவை மாவட்ட மக்களையும், சுற்றுலாப் பயணிகளையும் மிகவும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது.

இப்பூங்கா 1965ம் ஆண்டு 41/2 ஏக்கர் பரப்பளவில் தொடங்கப்பட்டு ஓர் உயிரியல் மற்றும் பொழுதுபோக்கு பூங்காவாகச் சுற்றுலாப் பயணிகளை இப்பூங்கா பெரிதும் கவர்ந்து வந்துள்ளது. 2013ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இங்கு 335 பறவைகள், 106 பாலூட்டிகள் மற்றும் 54 ஊர்வன உள்ளிட்ட 890 விலங்குகள் இருந்தன. வ.உ.சிதம்பரம் பிள்ளையின் நினைவாக இப்பெயர் பூங்காவிற்கு சூட்டப்பட்டது.கோவை மாநகராட்சியால் வ.உ.சி பூங்கா நிர்வகிக்கப்பட்டு வந்தது.

கோவை மாவட்டத்தில் சிறந்த பொழுது போக்கு இடங்கள் இல்லாத நிலையில் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி, சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைத்து வயதினருக்கும் இப்பூங்கா ஒரு பொழுது போக்கு மையமாக சுமார் 60 ஆண்டுகளாக விளங்குகிறது.

2005ம் ஆண்டில், ஜூலை 6ம் தேதியன்று



அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களால் இப்பூங்காவில் நடப்பட்டு வளர்ந்து வரும் மரம் பச்சைநாயகி என்று பெயரிடப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

இத்தகைய சிறப்புமிக்க உயிரியல் பூங்காவை, மத்திய உயிரியல் பூங்கா ஆணையம் அறிவுரையின்படி மேம்படுத்த கோவை மாநகராட்சி நிர்வாகமும், தமிழக அரசும், முன்வர தவறிய நிலையில் இதன் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு, உயிரினங்கள் இடம் மாற்றம் செய்யப்படுவது, மிகவும் கண்டிக்க தக்கதும், அரசு வெளிச்சம்போட்டு காட்டியுள்ளது. நிர்வாகத்தின் கையாளகாதனத்தை

விடியா திமுக அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக கோவை மாவட்டத்திற்கென எந்தவொரு திட்டத்தையும் தராமல், எடப்பாடி தலைமையிலான அம்மா அரசு கோவையின் வளர்ச்சிக்கு தந்து சிறப்பித்த சாதனைத்திட்டங்களான பாலங்கள், குடிநீர் திட்டப்பணிகள், சீர்மிகு நகர திட்டம், சாலைகள் விரிவாக்கம் மற்றும் குளங்கள் மேம்பாடு ஆகியவற்றில் சுணக்கம் காட்டி கோவை மாவட்டத்தை புறக்கணித்து வருகிறது. இந்த நிலையில், வ.உ.சி பூங்காவில் உள்ள உயிரினங்கள் இடமாற்றம் செய்து, விடியா அரசு பூங்காவிற்கு மூடுவிழா காண்கிறது.

கோவை மாநகராட்சி நிர்வாகமும், தமிழக அரசும், தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை மேற்கொண்டு, மேம்படுத்தி மீண்டும் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்வதோடு, பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணி களின் விருப்பத்தை பூர்த்தி செய்ய அரசு முன் வரவேண்டும்.

இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# வால்பாறை பகுதியில் 127 மி.மீ மழை பதிவு!

கோவை, நவ.6–

கோவையில் நேற்று பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு,

அன்னூர்–21, மேட்டுப்பாளையம்–55, சின்கோனா–64,சின்னக்கல்லாறு–72,வால்பாறை–127,(வால்பாறை தாலுகா–126), சோலையாறு–57, ஆழியார்–48, சூலூர்–48, பொள்ளாச்சி–22, கோவை தெற்கு–14, பீளமேடு–20.20, பெ.நா.பாளையம்–43.80, பில்லூர் அணை–70, வாரப்பட்டி–4, தொண்டாபுத்தூர்–28, சிறுவானி அடிவாரம்–34மொத்தத்தில்–911.20பதிவாகிஇருந்தது. சராசரி 39.62 ஆகும்.

### தீயணைப்பு துறை சார்பில்

# விபத்தில்லா தீபாவளி கொண்டாட விழிப்புணர்வு!

கோவை, நவ. 6–

தீ விபத்தில்லா தீபாவளி கொண்டாட தீயணைப்பு துறை சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தீபாவளி பண்டிகை வருகிற, 12ம் தேதி நாடு முழுவதும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட உள்ளது. இதையடுத்து தீ விபத்தில்லா பாதுகாப்பான தீபாவளி கொண்டாட தீயணைப்பு துறை சார்பில் கடந்த, 1ம் தேதிமுதல்விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கோவை மாவட்டம் முழுவதும் தீயணைப்பு துறை நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அந்தந்த நிலைய அலுவலர்கள் மூலம் பள்ளி, கல்லூரி, பஸ் ஸ்டாண்ட், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த தீயணைப்பு துறை மாவட்ட அலுவலர் அண்ணாதுரை உத்தரவிட்டுள்ளார்.

இதை தொடர்ந்து கோவை பீளமேடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பில் பாதுகாப்பாக பட்டாசு வெடிப்பதுகுறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக சிங்காநல்லூர் காமராஜர் ரோட்டில் அமைந்துள்ள காந்தி நூற்றாண்டு நினைவு நடுநிலைப் பள்ளியிலும், சவுரிபாளையத்தில் உள்ள தனியார் மேல்நிலைப்பள்ளியிலும் மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு தீ விபத்தில்லா தீபாவளி மற்றும் பாதுகாப்பாக பட்டாசு வெடிப்பது எப்படி? என்பது குறித்து நிலைய அலுவலர் ரவிக்குமார் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

துண்டு பிரசுரங்களையும் வழங்கினர். தொடர்ந்துசிங்காநல்லூர் பஸ் ஸ்டாண்டில் உள்ள பயணிகளுக்கும் பாதுகாப்பாக பட்டாசு வெடிப்பதுகுறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.




கோவை மாநகராட்சி 41வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.சாந்தி தலைமையில் மருதமலை ரோடு பி.என்.புதூர் சாலையில் மயானத்துக்கு பின்புறம் பொதுமக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி புதிதாக திறக்கப்பட உள்ள டாஸ்மாக் கடையை அகற்ற கோரி மாவட்ட கலெக்டரிடம் மனு அளிக்க வந்தனர்.

### மேட்டுப்பாளையத்தில்

# மழைக்கு வீடுகள் இடிந்து சேதம்!

## ஏ.கே.செல்வராஜ் எம்.எல்.ஏ. ஆறுதல்!!

மேட்டுப்பாளையம், நவ. 6–

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக விட்டுவிட்டு கன மழை பெய்து வருகிறது பல நேரங்களில் பலத்த காற்று மற்றும் இடி மின்னலுடன் கன மழை பெய்கிறது.

இந்த நிலையில் மேட்டுப்பாளையம் பகுதியில் நேற்று மதியம் துவங்கிய மழை இரவு வரை விட்டு விட்டு பெய்தது. இதனால் இப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட ஆறாவது வார்டு வெல்லல் நாயுடு வீதியில் சுமார் 50க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ள நிலையில் நேற்று பெய்த தொடர் மழையின் காரணமாக அப்பகுதியில் வசித்து வரும் மணிகண்டன் என்பவருக்கு சொந்தமான ஓட்டு விடும் இவரது வீட்டின் அருகே வசித்து வரும் ராதா என்பவரது ஓட்டு வீடும் பலத்த மழையின் காரணமாக சேதமானது.

இதை எடுத்து நேற்று அங்கு சென்று ஆய்வு மேற்கொண்ட மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் சந்திரன் நகர மன்ற தலைவர் மஹரிபா பர்வீன் மற்றும் ஆணையாளர் அமுதா ஆகியோர் பொதுமக்களை தனியார் மண்டபத்தில் தங்க வைத்தனர்.

இந்த நிலையில் பொது மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள தனியார் மண்டபத்தில் இன்று மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் ஏ கே செல்வராஜ் நேரில் சென்று அவர்களிடம் ஆறுதல் கூறினார் மேலும் அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருமாறு வருவாய் அலுவலர்களிடம் தெரிவித்தார்.

மேலும் வீடுகள் இடித்திருக்கும் இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசிடம் எடுத்துக் கூறி பெற்று தர உள்ளதாக தெரிவித்தார். இதில் மேட்டுப்பாளையம் நகர செயலாளர் வான்மதி சேட்,நகர மன்ற உறுப்பினர் சலீம், மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### பஸ்சில் சென்ற

# பெண்ணிடம் நகை அபேஸ்!

கோவை, நவ.6–

கோவை ராமநாதபுரம் பாலாஜி நகர் பகுதியில் சேர்ந்தவர் ஜெயக்குமார் என்பவரின் மனைவி சாந்தி (53). தனியார் நிறுவனத்தில் கிளர்க்காக பணிபுரிந்து வருகிறார். இவர் நேற்று பஸ் மூலம் ராமநாதபுரம் சௌரிபாளையம் பகுதிக்கு சென்று கொண்டு இருந்தார்.பஸ் ஸ்டாப்பில் இறங்கிய பொழுது அவர் கழுத்தில் அணிந்து இருந்த மூன்று பவுன் தங்கச் செயின் காணாமல் போய் இருந்தது. இது குறித்து சாந்தி ராமநாதபுரம் போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### ரோட்டரி கிளப் ஆப் சார்பில்

# பேண்ட் வாத்திய போட்டி!

கோவை, நவ.6–

ரோட்டரி கிளப் ஆப் கோயமுத்தூர் கடந்த 22 வருடங்களாக தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள பள்ளி மாணவ மாணவியர் பங்கேற்கும் பேண்ட் வாத்திய போட்டியை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டுக்கான பேண்டு வாத்திய போட்டி அவினாசி சாலையில் உள்ள




மணி மேல்நிலை பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.இதில் 17 பள்ளிகளில் இருந்து பேண்டு வாத்திய குழு மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.முன்னதாக போட்டிகளை,. ரோட்டரி 3201 மாவட்டத்தின் 2024 25 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் மூத்த வழக்கறிஞர் ரொட்டேரியன் ஏ. கே.எஸ் சுந்தர்வடிவேலு துவக்கி வைத்தார்.

போட்டியில் கலந்து கொண்ட மாணவ,மாணவிகள் வண்ண மயமான பேண்டு வாத்திய சீருடை அணிந்தபடி, போட்டியில் தங்கள் இசைத் திறமை, உடல் வலிமை மற்றும் ஒழுக்கத்தை நேர்த்தியாக வாசித்து அணிவகுப்பு நடத்தினர்.

இதில் நடுவர்களாக பி ஆர் எஸ் பேண்ட் மாஸ்டர்கள் கலந்து கொண்டு சிறந்த குழுவினரை தேர்வு செய்தனர். கலப்பு,மற்றும் மாணவர் குழு,மாணவியர் குழு என மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில், கலப்பு பிரிவில் பிஷப் பிரான்சிஸ் பள்ளி,மாணவியர் பிரிவில் அவிலா கான்வெண்ட், மாணவர் பிரிவில் லாரன்ஸ் பள்ளி ஆகியோர் முதலிடம் பிடித்தனர்.

தொடர்ந்து முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாமிடம் பிடித்த பேண்ட் வாத்திய குழுவினருக்கு ரொக்க பரிசு கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை சிறப்பு விருந்தினர் சுந்தர வடிவேலு வழங்கி கவுரபடுத்தினார். நிகழ்ச்சியில், ரோட்டரி கிளப் ஆப் கோயமுத்தூர் தலைவர் விஜய் ,செயலாளர் பாலசுப்ரமணியன், சேர்மன் குணசேகரன் உட்பட ரோட்டரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மின்சாரம் தாக்கி நெசவு தொழிலாளி சாவு!

மல்லூர்,நவ.6–

சேலம் ஆட்டையாம்பட்டி அருகே உள்ள எஸ் பாலம் பகுதியை சேர்ந்தவர் விஜயசங்கர் (37),இவரது மனைவி சீதா (29) இவர்களுக்கு தாராஸ்ரீ (9),என்ற மகளும் மனோஜ் (5) என்ற மகனும் உள்ளார்கள் விஜயசங்கர் தனது வீட்டில் சொந்தமாக தறி வைத்து ஓட்டி தொழில் செய்து வருகிறார் சம்பவத்தன்று வி ஜயசங்கர் தனது வீட்டில் தறி ஓட்டி கொண்டிருந்தார் மின் மோட்டாரில் ஆயில் குறைவாகயிருந்துள்ளது

அதனை அறிந்து விஜயசங்கர் மோட்டாருக்கு ஆயில் ஊற்றுவதற்காக சென்றார் அப்போ து எதிர்பாராத விதமாக அவரைமின்சாரம் தாக்கியது இதில் தூக்கி விசப்பட்ட அவரின் சத்தம் கேட்டு குடும்பத்தினர் ஓடிவந்து அவரை தூக்கி கொண்டு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள் அங்கே அவரை பரிசோதித்த மருத்துவர் ஏற்கனவே அவர் இறந்துவிட்டார் என கூறினர். இது குறித்து ஆட்டையாம்பட்டி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகிறார்கள்.

# தென் ஆப்பிரிக்காவை குறைந்த ரன்களில் சுருட்டியதால் ‘ரன் ரேட்’டிலும் முதலிடம் பிடித்த இந்தியா!

கொல்கத்தா,நவ.6–

தென் ஆப்ரிக்கா அணியை 83 ரன்னில் சுருட்டி 243 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அணி அபார வெற்றி பெற்றுள்ளது. மேலும், புள்ளி பட்டியல், ரன்ரேட்டிலும் முதலிடம் பிடித்தது.

இந்திய அணியின் 8வது போட்டி நடப்பு ஐசிசி உலககக்கோப்பை ஒருநாள் போட்டியில் 36 லீக் போட்டியில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் மோதியது. டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி தொடக்க வீரர்களாக ரோஹித், சுப்மன்கில் இருவரும் களமிறங்கினர். இவர்களின் தொடக்கம் சிறப்பாக அமைந்தது.

ரோஹித் 40 ரன் எடுத்து விக்கெட்டை இழந்தார். இவர்களின் கூட்டணியில் 62 ரன்கள் சேர்க்கப்பட்டது. அடுத்து இந்திய அணியின் அதிரடி வீரர் கிங் கோலி களமிறங்கினார்.மறுபுறம் விளையாடி வந்த சுப்மன் கில் நிதானமாக 23 ரன்கள் சேர்த்து விக்கெட்டை இழந்தார். பின்னர் ஷ்ரேயாஸ் ஐயர், கிங் கோலி இருவரும் தென்னாபிரிக்கா அணியின் பந்து வீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் பறக்க விட்டனர். இவர்களின் விக்கெட்டை பறிக்க முடியாமல் பந்து வீச்சாளர்கள் திணறினர்.

இதற்கிடையில் இருவரும் அரைசதம் விளாசினார். இருப்பினும் சிறப்பாக விளையாடி வந்த ஷ்ரேயாஸ் ஐயர் 87 பந்தில் 7 பவுண்டரி, 2 சிக்ஸர் என 77 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ராகுல் வந்த வேகத்தில் 8 ரன்னில் வெளியேறினார். பின்னர் களத்திற்கு வந்த சூர்யகுமார் யாதவ் 5 பவுண்டரி விளாசி 22 ரன்னில் விக்கெட் கீப்பர் குயிண்டன் டி காக்கிடம் கேட்சை கொடுத்து நடையை கட்டினார். கடைசியில் இறங்கிய ரவீந்திர ஜடேஜா வந்த வேகத்தில் 3 பவுண்டரி, 1 சிக்ஸர் என மொத்தம் 29 ரன்கள் குவித்தார். மறுபுறம் நிதானமாக விளையாடி வந்த கிங் கோலி சதம் விளாசினார். இறுதியாக இந்திய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 326 ரன்கள் குவித்தது. கடைசிவரை களத்தில் கோலி 101 ரன்களுடனும், ஜடேஜா 29 ரன்களுடனும் இருந்தனர்.

தென் ஆப்பிரிக்கா அணி 327 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்கா அணியின் தொடக்க வீரர்களாக தேம்பா பாவுமா, குயிண்டன் டி காக் களமிறங்கினர்.

2 ஓவரை முகமது சிராஜ் வீசிய போது அந்த ஓவரின் 4வது பந்தில் நடப்பு உலக கோப்பையில் 4 சதங்கள் விளாசி அதிரடி காட்டி வந்த தென் ஆப்பிரிக்க வீரர் குயிண்டன் டி காக் ரன் எடுக்காமல் டக் அவுட் ஆகி விக்கெட்டை பறிகொடுத்தார்.

அடுத்து ராஸ்ஸி வான் டெர் டுசென் களமிறங்க மறுபுறம் விளையாடி வந்த தொடக்க வீரர் தேம்பா பாவுமா ஜடேஜா வீசிய முதல் ஓவரில் 11 ரன் எடுத்து போல்ட் ஆனார்.

பின்னர் ஐடன் மார்க்ராம் வந்த வேகத்தில் ஷமி ஓவரில் அடுத்தடுத்து 2 பவுண்டரி விளாசி அடுத்த பந்திலே விக்கெட் கீப்பர் ராகுலிடம் கேட்சை கொடுத்து 9 ரன்னில் வெளியேறினார். அடுத்து வந்த ஹென்ரிச் கிளாசென் 11 பந்தில் வெறும் 1 ரன் எடுத்து ஜடேஜா ஓவரில் விக்கெட்டை பறிகொடுத்தார். அடுத்த ஓவரில் களத்தில் விளையாடி வந்த ராஸ்ஸி வான் டெர் டு அவுட் ஆனார்.

இதனால் தென் ஆப்பிரிக்கா அணி 13 ஓவரில் 5 விக்கெட்டை இழந்து 40 ரன்கள் மட்டுமே எடுத்து பரிதாபமான நிலையில் இருந்தது. பின்னர் களமிறங்கிய வீரர்கள் நிலைத்து நிற்காமல் அடுத்தடுத்து விக்கெட்டை இழந்து பெவிலியன் திரும்பினர். அதன்படி கேசவ் மகாராஜ் 7, டேவிட் மில்லர் 11, மார்கோ ஜான்சன் 14, ராபடா 6 ரன்னில் விக்கெட்டை இழந்தனர். இறுதியில் தென் ஆப்பிரிக்கா அணி 27.1 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 83 ரன்னில் சுருண்டது. 243ரன்கள்வித்தியாசத்தில் இந்தியா அணி வெற்றி பெற்றது. இந்திய அணியில் ஜடேஜா 5 விக்கெட்டையும் ஷமி, குல்தீப் யாதவ் தலா 2 விக்கெட்டையும், சிராஜ் 1 விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர்.

இந்த வெற்றி மூலம் நடப்பு உலக்கோப்பையில் விளையாடிய 8 போட்டிகளில் ஒரு போட்டியில் கூட தோல்வியை தழுவாமல் அனைத்து போட்டியிலும் வெற்றி பெற்று 16 புள்ளிகளுடன் முதல் இடத்தை தக்க வைத்துள்ளது. ரன்ரேட்டில் இந்தியா முதலிடம் பிடித்தது.



அரசு வேலை வாங்கி தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்க கோரி வெள்ளாள முன்னேற்ற கழகத்தின் சார்பில் தடையை மீறி ஆர்ப்பாட்டம் கோவை தெற்குத் தாசில்தார் அலுவலகம் அருகே நடைபெற்றது. இதில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சியினர், அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து போலீசார் அவர்களை தடுத்து கைது செய்தனர்.

### தொடர் தோல்வி எதிரொலி:

# இலங்கை கிரிக்கெட் வாரியம் கலைப்பு!

கொழும்பு,நவ.6

13வது உலகக்கோப்பை தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதுவரை நடந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்க அணிகள் அரையிறுதி சுற்றை எட்டியுள்ளன. மீதமுள்ள 2 அணிகள் இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

இதில் பங்கேற்றுள்ள இலங்கை அணி 7 ஆட்டங்களில் விளையாடி 5 தோல்வி மற்றும் 2 வெற்றி பெற்று அரையிறுதி வாய்ப்பை இழந்தது. மேலும் கடந்த ஆட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக 55 ரன்களில் சுருண்டு மோசமான தோல்வியை தழுவியது. இதனால் இலங்கை அணிக்கு எதிராக அந்நாட்டு ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில் உலகக் கோப்பையில் தொடர் தோல்வி எதிரொலியாக இலங்கை கிரிக்கெட் வாரியம் கலைக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் வாரியத்தைகலைத்துஇலங்கை விளையாட்டு துறை அமைச்சர் ரோஷன் ரணசிங்கே உத்தரவிட்டுள்ளார். இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் தற்காலிக தலைவராக அர்ஜூனா ரணதுங்கா நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் தற்காலிக குழுவில் ஓய்வு பெற்ற நீதிபதி உட்பட 7 பேர் இடம்பெற்றுள்ளனர். மேலும், வங்கதேசம், இலங்கை அணிகள் டெல்லி அருண் ஜேட்லி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு மோதுகிறது.

### 2 நாட்கள் நடைபெற்ற

# வாக்காளர் சிறப்பு முகாமில் 6 லட்சம் பேர் விண்ணப்பம்!

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்!!

சென்னை, நவ.6

தமிழ்நாடு முழுவதும் கடந்த 2 நாட்களாக நடைபெற்ற வாக்காளர் சிறப்பு முகாம் மூலமாக 6 லட்சம் விண்ணப்பங்கள் வந்திருப்பதாக தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் கடந்த 4–ஆம் தேதி மற்றும் 5–ஆம் தேதி ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதும் 31 ஆயிரம் வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற சிறப்பு முகாம்கள் மூலமாக 6 லட்சம் வாக்காளர்கள் விண்ணப்பங்கள் வழங்கி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். 18 வயது பூர்த்தியடைந்த புதிய வாக்காளர்கள் 4 லட்சத்து 7ஆயிரத்து 100 பேர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள 1.56 லட்சம் விண்ணப்பங்கள் என மொத்தம் 6 லட்சத்து 112 விண்ணப்பங்கள் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சிறப்பு முகாமை தவறவிட்டவர்கள் வரும் 18, 19 ஆகிய தேதிகளில் நடைபெறும் முகாமை பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



திருப்பூர்தொழில்துறை சார்பில் உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை ரத்து செய்ய கோரி விஜயகுமார் எம்.எல்.ஏ.விடம் இன்று காலையில் தொழில் துறையினர் மனு அளித்தனர்.

### திருவள்ளூரில் பயிற்சி கூட்டம்:

# வருமான வரி சோதனை என்ற மிரட்டலுக்கு தி.மு.க. பயப்படாது!

## பா.ஜ.க.வுக்கு முதல்வர் ஸ்டாலின் கண்டனம்!!



திருவள்ளூர், நவ.6–

திருவள்ளூரில் நடைபெற்ற சென்னை மண்டலதிமுக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள்பயிற்சி கூட்டத்தில்முதலமைச்சர் உரையைவாசித்தஅமைச்சர் உதயநிதி ஸ்டாலின். “தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பமும் பயனடையும் வகையில் பார்த்து பார்த்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறது திமுக அரசு” எனதமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்தெரிவித்தார்.

திருவள்ளூரில்நேற்று சென்னை மண்டல திமுக வாக்குச்சாவடிமுகவர்கள் பயிற்சி பாசறைகூட்டம் நடந்தது

இதில், ஒருங்கிணைந்த சென்னையில் 6 மாவட்டங்கள், காஞ்சிபுரம் வடக்கு, தெற்கு, திருவள்ளூர் மத்திய, கிழக்கு, மேற்கு என 11மாவட்டங்களைச் சேர்ந்த வாக்குச்சாவடி முகவர்கள் 11,569 உட்படசுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

முதலமைச்சரும்,திமுக தலைவருமானமு.க. ஸ்டாலின்வைரஸ் காய்ச்சல் காரணமாக இக்கூட்டத்தில் நேரடியாக கலந்து கொள்ளமுடியவில்லை என்றாலும், தனது

சென்னை ஆழ்வார் பேட்டை இல்லத்தில் இருந்துகாணொலி வாயிலாக கூட்டத்தில் பங்கேற்று சிறிது நேரம் பேசினார். பின்னர் முதலமைச்சரின் உரையைஅமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாசித்தார். முதலமைச்சர் உரையில் கூறியிருப்பதாவது.

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கு உட்பட்ட பகுதிகளில் இருக்கும் வாக்காளர்களுக்கும் மக்களவைத் தேர்தல் வெற்றிக்கும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் தான் முழு பொறுப்பு

உங்களை நம்பித்தான் நாற்பதும் நமதே, நாடும் நமதே என்று கம்பீரமாக முழங்கி வருகிறோம். அந்த கம்பீரத்தோடு இன்று முதல் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் சிறப்பாக பணியாற்றிட வேண்டும்,

தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பமும் பயனடையும் வகையில் பார்த்து பார்த்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறது திமுக அரசு”

“பாஜகவின் அனைத்து துரோகங்களுக்கும் உடந்தையாக இருந்தது அதிமுக.

பிரிந்தது போன்று நாடகமாடும் பாஜகஅதிமுகவின் துரோகங்களை மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும்

பாஜகவின் உண்மை முகத்தை மக்களிடம் வெளிப்படுத்த வேண்டும். ரெய்டுகள் மூலம் அதிமுகவை மிரட்டி நீட்டிய இடங்களில் எல்லாம் கையெழுத்து வாங்கியது பாஜக.

அதிமுகவை போல் திமுகவையும் மிரட்டலாம் என பகல் கனவு காண்கிறது பாஜக. ரெய்டு என்ற சலசலப்புகளுக்கும் மிரட்டல்களுக்கும் திமுக பயப்படாது. தற்போது அமைச்சர் எ.வ.வேலுவுக்கு சொந்தமான இடங்களில் வருமானவரித்துறை சோதனை நடத்தி வருகிறது. பல அச்சுறுத்தல்களை 75 ஆண்டுகளாகஎதிர்த்துநின்றுதான் திமுக வெற்றி பெற்றுள்ளது.

அமலாக்கத்துறைசோதனையில் ஒரு சதவீத வழக்குகளில் கூட குற்றம்சாட்டப்பட்டவர்கள் தண்டிக்கப்படவில்லை. பாஜகவின் கூட்டணிக் கட்சிகளாகவே வருமான வரித்துறையும், அமலாக்கத்துறையும் செயல்படுகிறது. அமலாக்கத்துறைக்கும் வருமான வரித்துறைக்கும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் மட்டும்தான் கண்ணுக்கு தெரிகின்றன.

வரும் நாடாளுமன்ற தேர்தலில் திமுக பெறும் வெற்றி மகத்தான வெற்றியாக இருக்க வேண்டும். தமிழ்நாடு என்ற அடையாளத்தை சிதைக்க நினைக்கிறது பாஜக. அதிமுகவுக்கும் பாஜகவுக்கும் அதன் கூட்டணி கட்சிகளுக்கும் தேர்தலில் டெபாசிட் கூட கிடைக்கக் கூடாது. இந்தியா கூட்டணி ஆட்சியை பிடித்தாக வேண்டும்.

வளமிகு இந்தியாவை உருவாக்க வேண்டும்” இவ்வாறு அவர் பேசினார்.

### பாராளுமன்றத் தேர்தல்:

# 20 தொகுதிகளில், பெண் வேட்பாளர்களை நிறுத்துவோம்!

## சீமான் பேட்டி!!

சென்னை, நவ.6

வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளில் பெண் வேட்பாளர்களை 20 தொகுதிகளிலும், ஆண் வேட்பாளர்களை 20 தொகுதிகளிலும் நிறுத்துவோம் என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறினார்.

ஈரோடு நீதிமன்றத்தில் இன்று ஆஜரான நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் செய்தியாளரிடம் கூறியதாவது:

மத்திய அரசு விசாரணை அமைப்புகளை ஏவி எதிர்க்கட்சிகளை பழிவாங்குவதாக தமிழக முதல்வர் தெரிவித்த கருத்துக்களை வரவேற்கிறேன். அந்த கருத்துக்கள் உண்மை தான்.

பா.ஜ.க. அரசு தேர்தல் நெருங்கும் சமயத்தில் எதிர்க்கட்சிகளை ஒதுக்குவதற்காக பழிவாங்கும் போக்கில், வருமானவரித்துறை மற்றும் அமலாக்க துறையை ஏவி சோதனை நடத்தி வருகிறது. இது கண்டனத்துக்குரியது.

நாகாலாந்து மக்கள் என்ன உணவு சாப்பிட வேண்டும் என்பது குறித்து எல்லாம் ஆளுநர் கருத்து தெரிவிக்க கூடாது. உணவு என்பது அவரவர்களின் விருப்ப உரிமை. வருகின்ற 2026 தேர்தலில் நடிகர் விஜய் கட்சி ஆரம்பித்து அரசியலுக்கு வருவது உறுதி. அதன் பிறகு திரைப்படங்களில் நடிப்பதை அவர் நிறுத்தி விடுவார். நாம் தமிழர் கட்சி சார்பில் 2024 நாடாளுமன்ற தேர்தலில் 20 தொகுதிகளில் ஆண் வேட்பாளர்களும், 20 தொகுதிகளில் பெண் வேட்பாளர்களும் போட்டியிடுவார்கள். இவ்வாறு சீமான் கூறினார்.



சூலூர் பள்ளபாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட சிறுவர் பூங்கா காம்பவுண்டுகளில் வர்ணம் பூசி திருக்குறள் வாசகங்கள் பொது அறிவு வாசகங்கள் எழுதியுள்ளார்கள் அதற்கு உறுதுணையாக இருந்த ஈஸ்வரன் சின்னச்சாமி, ராதா கிருஷ்ணன், ஆறுச்சாமி சாமிநாதன் ஆர்டிஸ்ட் அனைவரையும் பள்ளபாளையம் பேரூராட்சி சார்பாக கௌரவப்படுத்தப்பட்டது.

மாலை முரசு சேலம்
முரசம்
6-11-2023

# விஜய்யின் அரசியல் கனவு!

சென்னையில் நடந்த லியோ படத்தின் வெற்றி விழாவில் நடிகர் விஜய் பேசிய பேச்சு, அவர் அரசியலுக்கு வரக்கூடுமா என்ற பேச்சுகளை மீண்டும் எழுப்பியிருக்கிறது. பொதுவாக விஜய் நடிக்கும் படங்களுக்கு, அந்தப் படங்கள் ரிலீஸாவதற்கு முன்பாக நடக்கும் பாடல் வெளியீட்டு விழாக்களும் அதில் விஜய் பேசும் பேச்சுகளும் வெகுவாகக் கவனிக்கப்படும். லியோ விழாவில் விஜய் நேரடியாக அரசியலுக்கு வருவது குறித்து எதுவும் பேசவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவர் பேசியதில் சில பகுதிகள் கவனிக்கத்தக்கதாக இருந்தன. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இந்த விழாவில் விஜய் நேரடியாக அரசியலுக்கு வருவது குறித்து எதுவும் பேசவில்லை என்பது உண்மைதான்.

ஆனால், அவருடைய பேச்சிலிருந்து சில பகுதிகளைக் குறிப்பிட்டு அவர் அரசியலுக்கு வரலாமா என்று விவாதிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, “நமக்கு நிறைய பெரிய வேலைகள் இருக்கு, தேவையில்லாமல் சோஷியல் மீடியாவில் கோபப்பட்டு நேரத்தை வீணடிக்க வேண்டாம்” என்று கூறியது, முயலை வீழ்த்தியதைவிட யானையை வீழ்த்த வேண்டும் எனக் கூறியது, “இங்கே மக்கள்தான் மன்னர்கள். நான் உங்களுக்கு கீழ் இருக்கும் தளபதி நீங்க ஆணையிடுங்க நான் செய்கிறேன்,” என்று பேசியது ஆகியவற்றை வைத்து அவர் அரசியலுக்கு வரவிருப்பதைத்தான் சூசகமாகச் சொல்கிறார் என ரசிகர்கள் கூறி வருகின்றனர்.

விஜய் அரசியலுக்கு வருவாரா மாட்டாரா என்ற பேச்சு எழுவது இது முதல்முறையில்லை. கடந்த சில ஆண்டுகளாகவே விஜய்யின் படங்கள் வெளியாகும்போதெல்லாம் இதுபோன்றபேச்சுகள்எழுவதுவாடிக்கையாகியிருக்கிறது. இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் தொகுதி வாரியாக வாக்காளர்கள் பற்றிய புள்ளி விவரங்களை அனுப்பும்படி விஜய் மக்கள் இயக்கத்தின் மாவட்ட தலைவர்களுக்கு விஜய் உத்தரவிட்டதாகக் கூறப்பட்டது. அதேபோல, நடந்துமுடிந்த உள்ளாட்சித் தேர்தல்களிலும் விஜய் மக்கள் இயக்கம் களமிறங்கி சில இடங்களைப் பிடித்தது.

இந்தப் பின்னணியில்தான் விஜய் அரசியலுக்கு வருவாரா, வந்தால் யாரை எதிர்த்து அரசியல் செய்வார் என்பது குறித்த பேச்சுகள் தொடர்ந்து அடிபட்டு வருகின்றன. ரஜினி உள்ளிட்ட நடிகர்கள் அரசியலுக்கு வருவதாக பேச்சு அடிபடும்போது, எம்.ஜி.ஆரை முன்னிறுத்தியே உதாரணம் காட்டப்படும். ஆனால், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோருக்கும் தற்போது அரசியலுக்கு வரவிரும்பும் நடிகர்களுக்கும் பெரிய வித்தியாசம் உண்டு “ஒரு நடிகர் அரசியலுக்கு வர விரும்பினால், அவரது சினிமாவிலேயே அரசியல் உரையாடல் இருக்க வேண்டும். எம்.ஜி.ஆருக்கு அப்படித்தான் இருந்தது.

1949–ல் ஹீரோவாக நடிக்க ஆரம்பித்த எம்.ஜி.ஆர். 1952–ல் தி.மு.கவில் இணைந்துவிட்டார். அதற்குப் பிறகு அவருடைய படங்கள், பாடல்கள் எல்லாம் பகுத்தறிவுக் கருத்துகளைக் கொண்டதாக இருக்கும். சொந்தப் படமாக இருந்தால் தி.மு.க. கொடியையே காட்டுவார். இதையெல்லாம் விஜய் தனது படங்களில் செய்ததில்லை. சர்க்கார் படத்தில் மட்டும் ஏதோ சில அரசியல் விமர்சனங்களை வைத்தார் விஜய். அது போதவே போதாது. விஜய் நேரடியாக அரசியலுக்கு வந்தால் எதுவும் நடக்காது”. அரசியலில் இறங்க ஆசைப்படும் விஜய், சினிமாவில் நடித்துக் கொண்டேஅரசியலிலும்செயல்படலாம்எனக்கருதுகிறார்.

விஜய்க்கு அரசியல் ஆசை நிச்சயமாக இருக்கிறது. இவரும் இன்னொரு ரஜினியாகத்தான் இருக்கப்போகிறாரா என்பதுதான் கேள்வி. விஜய்யைப் பொறுத்தவரை, சினிமாவில் இருந்து நேரடியாக அரசியலில் இறங்கிவிடலாம் எனக் கருதுவதைப் போலத் தெரிகிறது. ஆனால், அரசியல் என்பது கரடுமுரடான பாதை. சினிமாவில் இருந்து கொண்டே இதைச் செய்ய முடியாது. வெளியில் வரவேண்டும். போராட வேண்டும். அதையெல்லாம் செய்ய விஜய் எந்த அளவுக்குத் தயாராக இருக்கிறார் என்பது தெரியவில்லை. வெறும் மன்றங்களை நம்பி அரசியலுக்கு வந்தால் வெற்றிபெற முடியாது.

எம்.ஜி.ஆருக்குப் பிறகு, சினிமாவிலிருந்து நேரடியாக அரசியல் கட்சி ஆரம்பித்து அரசியலில் குறிப்பிடத்தக்க அளவுக்கு சாதித்தவர் விஜயகாந்த். “அவரது ஆரம்ப காலப் படங்களில் பொதுவுடமைக் கருத்துகள் இடம் பெற்றிருக்கும். அரசியலுக்கு வருவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே தனது ரசிகர் மன்றங்களை அரசியல் மயமாக்க ஆரம்பித்தார். தனிக்கொடியை அறிமுகப்படுத்தினார். மாநாடுகளை நடத்தினார். பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் ஆனார். என்றாலும் அவருடைய வாக்கு விகிதம் 10 சதவீதத்தைத் தாண்டவில்லை என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

சினிமாவில் இருந்து கொண்டு, ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றிக் கருத்துச் சொல்வது வேறு, அரசியலுக்கு வந்தால் தினமும் நான்கு பிரச்சினைகள் குறித்து கேள்வி கேட்பார்கள். ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல வேண்டும். அதற்கெல்லாம் அவர் தயாராக இருக்கிறாரா என்பது தெரியவில்லை”

# ஆளுநர்களுக்கு உச்சநீதிமன்றம்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

வழக்கு தொடர்ந்த பின் மசோதாக்களுக்கு அவர் ஒப்புதல் அளித்தார். அதைப் பின்பற்றி மற்ற மாநில ஆளுநர்களும் ஒப்புதல் அளித்திருக்கலாம்.

ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் அல்ல என்பதை உணர வேண்டும். மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க உத்தரவிடக் கோரி மாநில அரசு நீதிமன்றங்களை நாட வேண்டுமா? உச்சநீதிமன்றத்திற்கு வழக்கு வருவதற்கு முன்னதாகவே ஆளுநர்கள் செயலாற்றி இருக்க வேண்டும். நீதிமன்றம் வந்த பிறகு செயலாற்றுவதை தவிர்க்க வேண்டும்.

ஆளுநர்கள் அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு முடிவெடுக்க வேண்டும். ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் அல்ல என்பதையும் உணர வேண்டும்.

ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் கொடுக்கும் முன்னர் அதனை ஆய்வு செய்யவும், அதுவரை அந்த மசோதாவை நிறுத்தி வைக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் மசோதாக்களுக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டதா இல்லையா என்ற முடிவை ஆளுநர்கள் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

பஞ்சாப் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட நிதி மசோதா உள்பட 7 மசோதாக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். ஆளுநருக்கு எதிராக தமிழகம் மற்றும் கேரளா அரசுகளும் வழக்கு தொடர்ந்துள்ளன.

இவ்வாறு தலைமை நீதிபதி சந்திரசூட் கூறினார். இந்த வழக்கு விசாரணையை வருகிற 10–ஆம் தேதிக்கு தலைமை நீதிபதி ஒத்தி வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விரைவாக விசாரிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பில் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டார். எனவே தமிழ்நாடு மற்றும் கேரளா, தெலுங்கானா அரசுகள் அந்தந்த மாநில ஆளுநர்களுக்கு எதிராக தொடர்ந்த வழக்குகளும் வருகிற 10–ஆம் தேதி விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# இறப்புகளை சந்திக்கும் இளைஞர்கள் !

பெற்றோரின் எதிர்பார்ப்புகள், நண்பர்களின் அழுத்தம், தேர்வை மையமாகக் கொண்ட கல்வி முறையின் தேவைகள் மற்றும் பாரம்பரிய குடும்பக் கட்டமைப்புகளின் சிதைவு ஆகியவற்றின் சுமைகளைச் சமாளிப்பது கடினம் என இன்றுள்ள இளம் வயதினர் கருதுகிறார்கள். எனவே டீன் ஏஜ் தற்கொலை எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் இந்தியா நெருக்கடியை எதிர்கொள்கிறது என்று பிரபல எழுத்தாளர் அருந்ததி நாத் கூறியுள்ளார்.



ஒவ்வொரு நாளும் டீன் ஏஜ் தற்கொலைகள் பற்றிய சோகமான செய்திகளை அறிந்து வேதனைப் படுகிறோம்.

அந்த வகையில் இளைஞர்கள் சாலை விபத்துகளில் இறப்பது, நீரில் மூழ்குவது அல்லது செல்பி எடுக்கும்போது உயரத்தில் இருந்து விழுவது போன்றவற்றையும் கேள்விப்படுகிறோம். இந்த சோகமான இழப்புகள், குடும்பங்கள் மற்றும் நண்பர்களுக்கு பெரும் வருத்தம் தருவதாக இருக்கிறது. அதே வேளையில், சமுதாயத்திற்கு இது கடுமையான இழப்புகளாகும், இளம் வயதில் சாதிக்க வேண்டிய மனிதஆற்றல்மற்றும்படைப்பாற்றல் திறன்களை இழக்கிறது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் சமீபத்திய விவரங்களின்படி, இந்தியாவில் ஒவ்வொரு மணி நேரமும் ஒரு மாணவர் தற்கொலை செய்து கொள்கிறார். 2007–2017 ஆண்டுகளில் மட்டும் 75,000 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இப்படி கடந்த பத்தாண்டுகளில் 52 சதவீதம் இறப்புகள் அதிகரித்துள்ளன. இந்த எண்ணிக்கை இப்போது அதிகரித்துள்ளது.

இந்த துயரங்கள் இளைஞர்களின் தனிப்பட்ட பண்புகள், வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் சமூக சூழல் உள்ளிட்ட பல காரணிகளால் இப்படி ஏற்படுகின்றன.

கூச்சம், மற்றும் உள்முக சிந்தனை கொண்ட நபர்கள் உணர்ச்சிகளுக்கு ஆளாகிறார்கள், மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள். இதனால் தற்கொலை எண்ணங்களை உருவாக்குகிறார்கள். உடல் அல்லது மனநல குறைபாடுகள் உள்ளவர்கள் பெரும்பாலும் ஒதுக்கிவைக்கப்படுகிறார்கள் அல்லது இரக்கமின்றி கேலி செய்யப்படுகிறார்கள். துன்புறுத்தப்பட்ட அல்லது கேலி செய்யப்படும் குழந்தைகள் சுயமரியாதை இழப்பால் தற்கொலைக்குத் தள்ளப்படலாம் என மன நல ஆலோசகர்கள் கூறுகிறார்கள். இன்றுள்ள இளைஞர்கள் டிஜிட்டல் ரீதியில் தங்களை அர்பணித்துக் கொண்டாலும் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வுகளால் வாழ்வதற்கான விருப்பம் விரைவில் சிதைந்து விடுகிறது.

உலகளவில் அதிக இளைஞர்கள் தற்கொலைகளை இந்தியா பதிவு செய்த போதிலும் சமூகத்தில் குறிப்பாக பெற்றோர் சமூகத்தில் மனநலப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க ஆர்வமில்லாத நிலையே உள்ளது. பெரும்பாலான பெற்றோர்கள் மனநலப் பிரச்சினைகளைப் பற்றி அறியாதவர்கள் . இவர்கள் மன நல ஆலோசனையைப் பெறுவதில்லை இந்த நிலையில் மனநலப் பாதுகாப்பு மசோதா, 2017 நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது, தற்கொலைக்கு முயற்சிப்பது குற்றமாகும். இந்திய தண்டனைச் சட்டம் 309. மனநலப் பாதுகாப்புச் சட்டம் தற்கொலை முயற்சியை குற்றமற்றதாக்குகிறது. ஆனாலும் குறைந்தபாடில்லை.

பெற்றோரின் எதிர்பார்ப்புகளின் பேரில் அடிக்கடி பெரும் மன அழுத்தத்தை உருவாக்குகிறது, இது ஒருபக்கம் இருக்கும் நிலையில் பயிற்சி மையங்களில் நடக்கும் தற்கொலைகளின் எண்ணிக்கையும் கூடிவருகிறது.

அடக்குமுறை, அவமதிப்பு மற்றும் மன்னிக்க முடியாத சூழலில் இருந்து தப்பிக்க முடியாமல் தவறான முடிவை எடுக்க நேரிடுகிறது.

இப்படிப்பட்ட சூழலில் அவர்களுக்கு கருணை கலந்த ஆலோசனை அளிக்க யாரும் இல்லை.

வழக்கமான பள்ளிகளில் கூட, மாணவர்களின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் திறன்களில் கவனம் செலுத்துவது குறைவாகவே உள்ளது, ஏனெனில் ஆசிரியர் வழிகாட்டும் குருவாக இருப்பதை விட பயிற்றுவிப்பாளராக இருக்க விரும்புகிறார். வணிக ரீதியாக பயிற்சி க் கூடங்கள் சித்திரவதை அறைகளை போல வே உள்ளது. எனவே பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை மாணவர்களின் நட்புறவாக மாற்றுவதற்கு இப்போது நேரம் வந்துள்ளது.

பெற்றோரின் வருமானம் மற்றும் கல்வி, பாலினம், சாதி, மதம், பிராந்திய மற்றும் மொழி அடையாளங்கள் ஆகியவை இளம் மனங்களின் மன ஆரோக்கியத்தையும் பாதிக்கும் பல சமூக மாறுபாடுகளில் அடங்கும். குடும்ப முரண்பாடும் குடும்ப வன்முறையும் குழந்தைகளின் வாழ்க்கையை மதிப்பிழக்கச் செய்கின்றன. சமூகத்தில் வெறுப்பும் மோதலும் பெருகும்போது, வேலையின்மை விகிதங்கள் அதிகரித்துவருகிறது, அவநம்பிக்கையான இளைஞர்கள் முட்டாள்தனமான செயல்களுக்கு பணம் செலுத்துவார்கள் என்று உளவியல் நிபுணர்கள் கூறுவதை யோசிக்க வேண்டும்.

எனவே தீவிரமான மனநிலை மாற்றங்கள், மரணம் அல்லது தற்கொலை பற்றிய நிலையான பேச்சு, தீவிர மன அழுத்தம், சமூக விலகல், உணவு மற்றும் தூக்க பழக்கங்களில் திடீர் மாற்றம் தொடர்ச்சியான சலிப்பு, கவனம் செலுத்துவதில் சிரமம் அல்லது பள்ளிப் பாடத்தின் தரம் குறைதல் என பாதிப்புகள் உள்ளன. எனவே இளம் தலைமுறையினர் நம்பிக்கையை இழப்பது வாழ்க்கையில் ஆர்வத்தை இழக்க வழிவகுக்கிறது. இளமைப் பருவத்தின் மனம் பெரும்பாலும் முதிர்ச்சியற்றது என்று விவரிக்கப்படுகிறது.

## தவிர்க்கும் வழிமுறைகள் !

தற்கொலை குறித்து மருத்துவ நிபுணர்கள் கூறியதாவது:–

இளம் வயதில் மூளை அதிக அளவிலான நியூரோபிளாஸ்டிக் தன்மையைக் கொண்டுள்ளன, இது புதிய தகவல்களை உறிஞ்சவும், ஒருங்கிணைக்கவும் மற்றும் பயன்படுத்தவும் உதவுகிறது. அவர்கள் புதிய மொழிகளை வேகமாக கற்றுக்கொள்வதோடு, தங்கள் பெற்றோரை விட புதிய டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்வதில் மிகவும் திறமையானவர்கள். அதே நேரத்தில், அபாயங்களைத் தடுக்க அல்லது குறைக்க நடத்தைகள் மீது போதுமான கட்டுப்பாடு உள்ளது.பெற்றோர்கள் குழந்தைகள் வளரும்போது தன்னம்பிக்கையைப் பெறவும், சுய மதிப்பை அங்கீகரிப்பதை ஊக்குவிக்கவும், கல்வி, வேலைவாய்ப்பு, நண்பர்கள் அல்லது வாழ்க்கைத் துணைகள் தொடர்பான அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி நியாயமான முடிவுகளை எடுக்க அவர்களுக்கு உதவ வேண்டும். முதியோர்களின் விருப்பங்கள் இளைஞர்கள் மீது ஆணையாக ஒருபோதும் திணிக்கப்படக்கூடாது. முன்னோக்குகள் மற்றும் சாத்தியக்கூறுகள் பற்றிய திறந்த விவாதங்கள் விரும்பத்தக்கது. ஒரு மாணவனின் சுயமரியாதையை ஆசிரியர்கள் ஒருபோதும் காயப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு உடல் ரீதியான தண்டனையை வழங்கக் கூடாது இவ்வாறு கூறியுள்ளனர்.

## டீன் ஏஜ் வயதினர் எப்படி இருக்க வேண்டும்?

பெற்றோர்கள் எப்போதும் தங்கள் குழந்தைகளுக்கு சிறந்ததையே விரும்புகிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.உங்கள் பெற்றோர் உங்களுக்காக எவ்வளவு செய்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். அதற்கு நன்றியுடன் இருங்கள்.அவர்கள் உன்னை நேசிக்கிறார்கள், எனவே நீங்கள் அவர்களை எவ்வளவு நேசிக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

அவர்களுடன் வெளிப்படையாகப் பேசுங்கள்.உங்கள் பெற்றோர் சொல்வதைக் கேளுங்கள்.சில இடங்களில் சமரசம் செய்ய கற்றுக்கொள்ளுங்கள்.உங்கள் பெற்றோரிடம் பொய் சொல்லாதீர்கள். திருடவே கூடாது. உங்களுக்கு பணம் தேவைப்பட்டால், அதை உங்கள் பெற்றோரிடம் கேளுங்கள்.

உங்கள் பெற்றோர் மீது எந்த வெறுப்பையும் வைத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் பெற்றோரின் எதிர்மறைகளைப் பார்க்காதீர்கள்; நேர்மறைகளில் கவனம் செலுத்துங்கள்.உதவிக்காக உங்கள் பெற்றோரை அணுகவும்; அவர்கள் எப்போதும் ஆதரவை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறார்கள்



கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் நடைபெற்று வரும் சிறப்பு திருத்த முகாமினை கோபி வருவாய் கோட்டாட்சியர்திவ்யா பிரியதர்ஷினி ஆய்வு செய்தார். அருகில் தாசில்தார் உத்திர சாமி உள்ளனர்.

### செஞ்சி தளவானூரில்

# 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் கால சிற்பங்கள் கண்டுபிடிப்பு!

செஞ்சி,நவ 6

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே தளவானூரில் 7–ஆம் நூற்றாண்டை சேர்ந்த பல்லவர் கால சிற்பங்கள் கண்டறியப் பட்டுள்ளது.

திருவண்ணாமலையைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் ராஜ் பன்னீர் செல்வம் மற்றும் வெடால் கிராமத்தை சேர்ந்த விஜயன் ஆகியோர் இணைந்து செஞ்சி பகுதியில் கள ஆய்வு மேற்கொண்ட போது தளவானூர் கிராமத்தில் பஞ்ச பாண்டவர் மலையின் பின்புறம் உள்ள வயல் வெளியில் சில சிற்பங்கள் இருப்பதாக வந்த தகவலின் பேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

தளவானூர் திருவம்பட்டு சாலையில் இருந்துஇடபுறம்திரும்பி பஞ்ச பாண்டவர் மலையின் பின்புறம் அமைந்துள்ள ஏழூர் அம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் வேப்பமரத்தின் அடியில் பலகை கல்லில் புடைப்பு சிற்பம் காணப் பட்டது.

சுமார் 4 அடி உயரமும் 3அடிஅகலமும்கொண்ட பலகைகல்லில் புடைப்பு சிற்பமாக உள்ள அச் சிற்பம் தவ்வை என்று கண்டறியப்பட்டது.தலையைத் தடித்த ஜடாபாரம் அலங்கரிக்க, வட்டமான முகத்தில், தடித்த உதடுகளும் இரு செவிகளில் மகர குண்டலமும் அணிந்து



இடது மற்றும் வலது கையை தொடையின் அருகே அமர்ந்த பீடத்தின் மீது வைத்தும் கால்களை நன்றாக பரப்பி அழகிய தாமரை மலர் மீது பாதங்களை வைத்து நேராக நிமிர்ந்து அமர்ந்துள்ளார்.

கழுத்தில் ஆபரணங்களும், கைகளில்கைவளை மற்றும் தோள்வளையும் அணிந்து இடையில் ஆடையும் அழகாக காட்டப்பட்டிருந்தாலும், மார்பு கச்சை அணியாமல் காட்சி தருகிறது. தவ்வை தாயின் வலது புறம் மகன் மாந்தியும், இடது புறம் மகள் மாந்தியும் அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. அதே போல் தவ்வையின் ஆயுதமான துடைப்பம் மாந்தன் அருகிலும், இடது புறம் மாந்தியின் தலைக்கு மேல் உடைந்தும் காணப்படுகிறது. தவ்வையின் தோல் அருகே இரு புறமும் தாமரை மொட்டுக்கள் காட்சி தருகிறது. வலது பக்கம் தாமரையின் அருகே பணிப் பெண் குழந்தையுடன் காட்சி தருகிறது.

இந்த சிற்பமைதியையும் கலை பாணியும் வைத்து இது 7–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் காலத்திய தவ்வை என்று உறுதி செய்யலாம். இதன் அருகே இரு பலகை சிற்பங்கள் காணப்பட்டது. இதில் கொற்றவை மற்றும் முருகன் என கண்டறியப்பட்டது.

சுமார்1400 வருடம் பழமையான பல்லவர் காலத்தைச் சேர்ந்த இச் சிற்பங்கள் இன்றும் வயல்வெளியில் மத்தியில் வெட்ட வெளியில் வளமையைக்காக்கும் தெய்வமாக அருள்பாலித்து வருவது சிறப்பாகும்.



சூறைக்காற்றினால்சேதமடைந்தவாழைகளைபடத்தில்காணலாம்.

### சூறைக்காற்றுடன் மழை:

# மேட்டுப்பாளையத்தில் வாழைகள் சேதம்!

மேட்டுப்பாளையம், நவ.6–

மேட்டுப்பாளையம் பகுதியில் மழையுடன் வீசிய பலத்த காற்றில் சிக்கி 400க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்து சேதம்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக இரவு நேரங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது.

பவானி ஆற்று நீரை ஆதாரமாக கொண்டு மேட்டுப்பாளையம், சிறுமுகை, காரமடை வாழை விவசாயமே பிரதான வாழ்வாதார தொழிலாக உள்ளது. இந்த நிலையில் நேற்று மாலை பலத்த சூறை காற்றுடன் பெய்த மழையில் மேட்டுப் பாளையம் அடுத்துள்ள புங்கம்பாளையம் பகுதியை சேர்ந்த சுப்பையன் என்பவர் தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த 400க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்து விழுந்து சேதமானது. இன்னும் ஓரிரு வாரங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த வாழை மரங்கள் முறிந்து விழுந்துள்ளது பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.வாழை விவசாயத்தில் முதலீடுசெய்திருந்தரூபாய் இதனால் சுமார் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வேளாண்த்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு சேதம் அடைந்த வாழைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுத்து ள்ளனர்.



பவானிசாகர் அணையில் நீர்ப் பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் கொடிவேரி அணையில் இருந்து 2,300 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் அங்கு சுற்றுலாப் பயணிகள் குளிக்கவும், பரிசல்களில் பயணிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

### மதவழிபாட்டு தலங்களில்

# பட்டாசுக்கு விதித்த தடையை எதிர்த்து மேல்முறையீடு!

## கேரள அரசு பரிசீலனை!!

திருவனந்தபுரம், நவ.6–

கேரள தேவசம் போர்டு துறை அமைச்சர் கே. ராதா கிருஷ்ணன் நேற்று கூறியதாவது:–

மத வழிபாட்டுத்தலங்களில் ஒற்றைப்படை நேரங்களில் பட்டாசு வெடிக்கத் தடை விதித்து கேரள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனை எதிர்த்து, தேவசம் போர்டு, இதர கோயில்களை நிர்வகிக்கும் அறக்கட்டளைகள் சார்பில் மேல்முறையீடு செய்வது குறித்து கேரள அரசு பரிசீலித்து வருகிறது.

கேரள மத வழிபாட்டு தலங்களில் பட்டாசு வெடிக்காமல் விழாக்களை நடத்துவது கடினம். பட்டாசுகளை வெடிப்பதற்கான நேரங்கள் குறித்த விவரங்களும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. இந்த சூழ்நிலையில் மேல் முறையீடு செய்வதே சிறந்த வழியாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பட்டாசு வெடிக்க தடை விதிக் கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் கேரள உயர் நீதிமன்றத்தில் நவம்பர் 3–ம் தேதி விசாரணைக்கு வந்தது.

அப்போது, கடவுளின் அருளையும், பிரியத்தையும் பெற எந்த புனித நூலிலும் பட்டாசு வெடிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடப்படவில்லை. இதனை கருத்தில் கொண்டு, ஒற்றைப் படை நேரங்களில் பட்டாசுகளை வெடிக்க கூடாது.

மேலும், மாநிலத்தின் அனைத்து மாவட்ட காவல் துறை தலைவர்களும், மத வழிபாட்டு தலங்களில் சோதனை நடத்தி சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருக்கும் பட்டாசுகளை பறிமுதல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

### விருதுநகர் அருகே

# கார் மோதி 2 பெண்கள் சாவு!

## 3 பேர் காயம்!!

விருதுநகர், நவ.6.

விருதுநகர் அருகே செங்குன்றாபுரம் பகுதியில் விவசாய பணிக்காக முருகநேரியைச் சார்ந்த பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் வந்துள்ளனர். இவர்கள் பணியை முடித்துவிட்டு சாலை ஓரத்தில் இருந்த பாலத்தின் மீது அமர்ந்து இருந்ததாக கூறப்படு கிறது. விருதுநகர்சூலக்கரையில்வசித்து வரும் சிவகிரி செந்தூர் பாண்டியனின் மகன் ராஜ் குமார்(38) என்பவர் அழகாபுரியிலிருந்து காரை விருதுநகர் நோக்கி ஓட்டி வந்துள்ளார். இவர் வந்த கார் செங்குன்றாபுரம் அருகே வந்து கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து சாலை ஓரத்தின் உள்ள பாலத்தின் மேலே அமர்ந்திருந்த பெண்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.



இந்த விபத்தில் முருகனேரியைச் சார்ந்த முத்துச்செல்வி ( 45 ) சம்பவ இடத்திலும், பேச்சிய ம்மாள்(54) மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமலும் உயிரிழந்தனர். இந்த விபத்தில் முருகனேரியைச் சார்ந்த செல்வவதி (55) , பாண்டியம்மாள் (40), பாப்பா (50) ஆகிய 3 பெண்கள் படு காயமடைந்தனர். ஆமத்தூர்காவல் நிலைய காவல்துறையினர் உடனடியாக காயமடைந்த பெண்களை மீட்டு விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர்.

காரை ஓட்டி வந்த ராஜ் குமாரை கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

### கேதார கவுரி விரத நோன்பு

# தீபாவளிக்கு மறுநாள் நவ.13-ல் விடுமுறை அளிக்க வேண்டும்!

## தமிழக அரசுக்கு பல்வேறு தரப்பினர் கோரிக்கை!!

சென்னை, நவ. 6–

தீபாவளிக்கு மறுநாள் கேதார கவுரி விரத நோன்பையொட்டி தமிழக அரசு விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும் என்று மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் உள்பட பல்வேறு தரப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர்.

தீபாவளி, பொங்கல் போன்றபண்டிகைதினங்களில்சொந்தஊர்களுக்கு மக்கள் சென்று வருவது வழக்கம். அந்தவகையில் ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையானது அக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு தீபாவளி வரும் நவ.12–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்தில் வருகிறது. இதனால் தமிழக அரசு தீபாவளிக்கு அடுத்த நாளான திங்கட்கிழமை (கேதார கவுரி விரத நோன்பு) விடுமுறை அளிக்க வேண்டும் என மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் தரப்பில் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது. இதேபோல கடந்த ஆண்டு தீபாவளி அக்.24–ல் கொண்டாடப்பட்டது.

இதற்கு அடுத்த நாள் விடுமுறை அளிக்க கோரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து தீபாவளிக்கு அடுத்த நாள் விடுமுறை அளிக்கப்படும் என அக்.22–ல் அரசு அறிவித்தது. இதனால் கடைசி நேர அறிவிப்பால், மக்கள் சொந்த ஊர்களுக்கு செல்வதிலும், எணைணமீண்டும் பணிக்கு திரும்புவதிலும் சிரமம் ஏற்பட்டது. எனவே இந்த ஆண்டாவது முன் கூட்டியே விடுமுறை அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சத்தீஸ்கர் முதல்வருக்கு ரூ.508 கோடி வழங்கிய செயலி உள்பட

# 22 சூதாட்டச்செயலிகளுக்கு தடை!

### மத்திய அரசு நடவடிக்கை!!

சென்னை, நவ.06–

சத்தீஸ்கர் மாநில காங்கிரஸ் முதல்வர் பூபேஷ் பாகல், மகாதேவ் சூதாட்ட செயலி உரிமையாளர்களிடம் இருந்து ரூ508 கோடி பணம் பெற்றார் என அமலாக்கத்துறை திடுக்கிட வைக்கும் குற்றச்சாட்டை தெரிவித்தது.

வட இந்தியாவில் பிரபலமான இந்த மகாதேவ் சூதாட்ட செயலி மீதான நடவடிக்கைகளை அமலாக்கத்துறை மேற்கொண்டது. இந்த சோதனைகளின் போது கூரியர் நிறுவனத்துக்கு சொந்தமான கார் மற்றும் அதன் உரிமையாளர் வீடுகளில் ரூ508 கோடி ரொக்கப் பணம் கைப்பற்றப்பட்டது.

சத்தீஸ்கர் மாநில தேர்தல் செலவுகளுக்காக முதல்வர் பூகேஷ் பாகலிடம் கொடுக்க வைத்திருந்த பணம் இது எனவும் சிக்கிய ஆசிம் தாஸ் என்பவர் வாக்குமூலம் கொடுத்ததாக அமலாக்கத்துறை தெரிவித்திருந்தது.

அமலாக்கத்துறையின் முதல் தகவல் அறிக்கையில் சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகல், மகாதேவ் சூதாட்ட செயலி உரிமையாளர்களிடம் மாநில தேர்தல் செலவுகளுக்காக ரூ508.6 கோடி பணம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

சத்தீஸ்கரில் சிக்கிய ஆசிம் தாஸின் செல்போனில் பதிவாகி இருந்த இ–மெயில்களை அமலாக்கத் துறை சோதனையிட்டது. இதில் மகாதேவ் சூதாட்ட செயலி வழக்கில் முக்கிய குற்றவாளியான சுபம் சோனி அனுப்பிய மெயில்கள் மூலம் சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகலுக்கு மொத்தம் ரூ508.6 கோடி பணம் கொடுக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது

கடந்த மாதம் இந்தியாவில் இயங்கும் முக்கிய ஓடி டி தளங்களான நெட்பிளிக்ஸ், ஹாட் ஸ்டார் மற்றும் அமேசான் போன்ற நிறுவனங்களுக்கு இனி ஆன்லைன் சூதாட்டம் தொடர்பான விளம்பரங்களை கூடாது என்று உத்தரவிட்டது. மேலும் தினசரி தொலைக்காட்சிகளிலும் இந்த சூதாட்ட செயலிகளுக்கும் மற்றும் கடன் செயலி விளம்பரங்களுக்கு தடை விதித்தது. இந்தியாவில் தொழில்நுட்ப துறை அமைச்சகம் 138 சூதாட்ட மற்றும் 94 ஆன்லைன் கடன் தரும் செயலிகளுக்கு தடை விதித்துள்ளது.

இந்த நிலையில் சத்தீஸ்கரில் செயல்பட்டுவரும் மகாதேவ் ஆப் உள்பட 22 சட்டவிரோத சூதாட்ட செயலிகளை முடக்க அமலாக்கத்துறை மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துக்கு பரிந்துரைத்தது. அதனடிப்படையில், மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மகாதேவ் ஆப் உள்பட 22 சூதாட்ட செயலிகளுக்கு தடை விதித்துள்ளது. சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள சத்தீஸ்கரில் மகாதேவ் செயலி பெரும் சர்ச்சையை கிளப்பி உள்ளது.



கோவை தொழில் துறையினர் மக்கள் பிரநிதிகளுடன் சந்திப்பு நிகழ்ச்சி கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஜேம்ஸ் தலைமையில் நடைபெற்றது. இந்தநிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பொள்ளாச்சி ஜெயராமன், பி.ஆர்.ஜி.அருண்குமார், செ.தாமோதரன், ஏ.கே.செல்வராஜ், அம்மன் கே.அர்ச்சுணன், கே.ஆர்.ஜெயராம், வி.பி.கந்தசாமி, டி.கே.அமுல்கந்தசாமி உள்ளிட்டோர் பங்கேற்று தொழில் அமைப்பினரின் கோரிக்கை மனுவை பெற்று கொண்டனர்.

## கூட்டுறவுக்கடைகளில்

# பெரிய வெங்காயம் கிலோ ரூ.30 க்கு விற்பனை!

### தமிழக அரசு நடவடிக்கை!!

சென்னை, நவ.06–

கடந்த சில மாதங்களுக்கு முன் தக்காளியின் விலை அதிகமாக உயர்ந்து கிலோ ரூ.200 க்கும் மேல் விற்பனையானது. இந்த நிலையில் தற்போது வெங்காயத்தின் விலை உயரத் தொடங்கி உள்ளது. வட மாநிலங்களான குறிப்பாக டெல்லி, மத்தியப்பிரதேசம், பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.80 வரை விற்பனையாகிறது.

பருவ மழை மற்றும் வெள்ளை ஈ தாக்குதலால் 2023 ஜூன் கடைசி வாரத்தில் இருந்து தக்காளியின் விலை உயர்ந்தது, அப்போது மத்திய அரசு கர்நாடகா, ஆந்திரா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து என்.சி.சி.எப் மற்றும் நாபெட் மூலம் தக்காளியை கொள்முதல் செய்து முக்கிய நுகர்வு மையங்களில் நுகர்வோருக்கு மானிய விலையில் வழங்கியது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. குறிப்பாக சின்ன வெங்காயம் 150 முதல் விற்கிறது. இதைத் தொடர்ந்து தமிழகத்தில் வெளிச்சந்தையில் பெரிய வெங்காயம் விலை உயர்ந்துள்ளது.

இதனால், கூட்டுறவு பசுமை காய்கறி கடைகளில் கிலோ வெங்காயம், 30 ரூபாய்க்கு விற்க கூட்டுறவு துறை உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் வெளிச் சந்தையில் வெங்காயம் விலை கிலோ, 70 ரூபாய் என்ற அளவில் உள்ளது.

இதனால், ஏழை மக்கள் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். எனவே, தாங்கள் நடத்தும் பண்ணை பசுமை கடைகளில், கிலோ, 30 ரூபாய்க்கு வெங்காயம் விற்குமாறு கூட்டுறவு சங்கங்களுக்கு, கூட்டுறவு துறை உத்தரவிட்டு உள்ளது. அதன்படி, சென்னை உள்பட மாநிலம் முழுவதும், 67 பண்ணை பசுமை காய்கறி கடைகளில் கிலோ வெங்காயம், 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 'நாபெட்' எனப்படும், இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பிடம் இருந்து கிலோ, 25 ரூபாய்க்கு வெங்காயம் வாங்கப்படுகிறது. இன்று முதல் விற்பனை தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## போலீஸ் அனுமதி மறுப்பு:

# புதுக்கோட்டையில் அண்ணாமலை நடைபயணத்தில் மாற்றம்!

புதுக்கோட்டை, நவ.06–

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை மேற்கொண்டுள்ள என் மண் என் மக்கள் நடை பயண யாத்திரை இன்று மாலை 3 மணிக்கு கந்தர்வகோட்டை தொகுதியிலும் மாலை 6 மணிக்கு புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியிலும் நடைபெற உள்ளது இதில் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் நடைபயணத்திற்கு புதுக்கோட்டை மச்சுவாடியிலிருந்து பாஜக தலைவர் அண்ணாமலை தலைமையில் நடை பயணம் தொடங்கி பிருந்தாவனம் கீழ ராஜ வீதி வழியாக அண்ணா சிலை வரை நடைபெற மேற்கொண்டு அங்கு பாஜக தலைவர் அண்ணாமலை சிறப்புரை ஆற்றுவதாக திட்ட மிடப்பட்டு காவல்துறைக்கு இடம் அனுமதி கேட்டு பாஜக விண்ணப்பித்திருந்தது. நேற்று புதுக்கோட்டை காவல் துறையினர் பாஜக தலைப்பில் விண்ணப்பித்துள்ள பகுதிகளில் மத வழிபாட்டு தலங்கள் மருத்துவமனைகள் மற்றும் மக்கள் கூடும் இடங்கள் இருப்பதால் தீபாவளி பண்டிகையும் இருப்பதால் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் பாஜக நடை பயண வழித்தடத்தில் ஊர்வலம் செல்ல தடை விதித்து அனுமதி மறுத்து நோட்டீஸ் வழங்குவதற்காக காவல்துறையினர் பாஜக அலுவலகம் சென்றனர் அங்கு மாவட்ட தலைவர் விஜயகுமார் மாவட்ட பொருளாளர் முருகானந்தம் உள்ளிட்ட நிர்வாகிகளோடு காவல்துறையினர் அனுமதி மறுப்பு கடிதத்தை வழங்க முற்பட்டனர் ஆனால் அனுமதி மறுப்பு கடிதத்தை பாஜகவினர் வாங்க மறுத்து காவல்துறையிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதோடு அதே வழித்தடத்தில் தான் நாளை நாங்கள் நடைபயணத்தை மேற்கொள்வோம் என்று கூறி வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்



இருப்பினும் மாற்றுப் பாதையில் நடை பயண யாத்திரை செல்வதற்கு காவல்துறை பாஜக தரப்பிடம் பேச்சுவார்த்தை நடத்தியது. வருகிறது இதனால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

புதுக்கோட்டையில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை இன்று மேற்கொள்ளவிருந்த "என் மண், என் மக்கள்" நடைபயண வழித்தடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, புதுக்கோட்டை மச்சுவாடியில் இருந்து, பிருந்தாவனம் வடக்கு ராஜவீதி, மேலராஜ வீதி வழியாக அண்ணா சிலை செல்ல காவல்துறை அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே அறிவித்த வழித்தடத்தில் செல்ல, காவல்துறை அனுமதி மறுத்த நிலையில், பாஜக நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் புதிய வழித்தடத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## 'வடக்கன்' படத்துக்காக ஜனனியின் இசையமைப்பில் பாடிய தேவா!



எம்டன் மகன், வெண்ணிலா கபடிக்குழு, நான் மகான் அல்ல, அழகர்சாமியின் குதிரை, பாண்டிய நாடு உள்ளிட்ட பல படங்களில் வசனம் மற்றும் திரைக்கதை எழுதியுள்ள எழுத்தாளர் பாஸ்கர் சக்தி முதல் முறையாக இயக்குனராக களமிறங்கும் புதிய படம், `வடக்கன்' இதில், கூத்துப் பட்டறை மாணவரான தியேட்டர் ஆர்ட்டிஸ்ட் குங்குமராஜ் கதாநாயகனாகவும், 'பாரதிராஜாவின் கண்டுபிடிப்பான வைரமாலா கதாநாயகியாகவும், நடிக்கின்றனர். இவர்களுடன் பல புது முகங்களும் நடிக்கின்றனர் .தமிழ்நாடு முழுவதும் பல்வேறு துறைகளில், பெரு நகரம் துவங்கி குக்கிராமங்கள் வரை வட இந்தியத் தொழிலாளர்கள் வேலை செய்யும் இன்றைய சூழலைப் பின்னணியாகக் கொண்டு நிகழும் ஒரு உணர்வு மயமான, நகைச்சுவை கலந்த, பொழுது போக்குத் திரைப்படமாக 'வடக்கன்' உருவாகியுள்ளது. இப்படத்தின் ஒளிப்பதிவை தேனி ஈஸ்வர் கவனிக்க, கர்நாடக இசைத் துறையில் தனி இடத்தைப் பிடித்தவரும், இந்துஸ்தானி, வெஸ்டர்ன், வெஸ்டர்ன் கிளாஸிக் முதலிய பல்வேறு இசைப் பிரிவுகளை கற்றுத் தேர்ந்தவரும், தனிப் பாடல்கள் மற்றும் இசை ஆல்பங்களை வெளியிட்டு பல்வேறு சர்வதேச விருதுகளை வென்றவருமான எஸ்.ஜெ.ஜனனி 'வடக்கன் ' திரைப்படத்துக்கு இசை அமைக்கிறார். இப்படத்தை 'டிஸ்கவரி புக் பேலஸ்' வேடியப்பன் தயாரித்து வருகிறார். இந்நிலையில் இப்படத்துக்காக பிரதானமாக இடம் பெறும் முக்கியமானதொரு பாடலை கவிஞர் ரமேஷ் வைத்யா எழுத, "தேனிசைத் தென்றல்' தேவா பாடினார். இப்பாடலைப் பாடி முடித்ததும் தேவா இசையமைப்பாளர் ஜனனியையும், கவிஞர் ரமேஷ் வைத்யாவையும் பாராட்டினார்.

## 'கமல் 233' படத்தில் சிவராஜ்குமார்!

கடந்த 3–ஆம் தேதி வெளியான இந்தியன் 2, படத்தின் கிளிம்பஸ் வீடியோ ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. இப்படத்தின் சிஜி வேலைகள் அமெரிக்காவில் மும்முரமாக நடந்து வருகிறது.

இப்படம் அடுத்த ஆண்டு கோடை கொண்டாட்டமாக வெளியாகவுள்ள நிலையில், இந்தியன் 3 படமும் கிட்டத்தட்ட உருவாகி முடிந்துள்ளதாகவும், இன்னும் சில காட்சிகள் மட்டுமே படமாக்கப்படவேண்டியுள்ள நிலையில், இந்தியன்3 படமும் அடுத்த ஆண்டிலேயே வெளியாகவுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், கமல்ஹாசன், கல்கி 2898 ஏ.டி , ஹெச் வினோத்துடன் கே.எச் 233, மணிரத்னத்துடன் கே.எச் 234 போன்ற படங்களில் கவனம் செலுத்தவுள்ளார். ஹெச் வினோத்–கமல் கூட்டணியில் உருவாகும்



படத்தில் பிரபல கன்னட நடிகர் சிவராஜ்குமார் முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னதாக ஜெயிலர் படத்தில் மாஸ் காட்டிய சிவராஜ்குமார் நடிப்பில் அடுத்ததாக கேப்டன் மில்லர் படத்துக்காக தனுசுடன் இணைந்து நடித்தார். இப்படம் விரைவில் வெளியாகவுள்ளது. ராணுவ கதைக்களத்தில் உருவாகவுள்ள இந்தப் படத்திற்காக கமலின் துப்பாக்கி சூட்டிங் பயிற்சி வீடியோ வெளியாகி ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்து வரும் இப்படத்தின்படப்பிடிப்பு வெளிநாடுகளிலும் நடத்தப்படவுள்ளது.



## 'ஜெய்பீம்' நோக்கம் முழுமையடைந்தது'!

### சூர்யா நெகிழ்ச்சி !!

நடிகர் சூர்யாவின் திரையுலக பயணத்தில் மிக முக்கியமான படமாக அமைந்தது ஜெய் பீம் திரைப்படம். கடந்த 2021–ம் ஆண்டு ஓடிடி தளத்தில் வெளியான இப் படத்தை எழுத்தாளர் த.செ. ஞானவேல் இயக்கியிருந்தார். இதில், சூர்யாவுடன் மணிகண்டன், பிரகாஷ்ராஜ், லிஜோமோல் ஜோஸ், ராவ் ரமேஷ், ரஜிஷா விஜயன், இளவரசு, ராஜு முருகன், குரு சோமசுந்தரம் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். இந்நிலையில், இப்படம் வெளியாகி இரண்டு ஆண்டுகள் ஆனதை சூர்யா நெகிழ்ச்சியுடன் தனது சமூக வலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, "ஜெய்பீம் திரைப்படம் வெளியான இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி, வருகிற வாழ்த்தும், வெளிப்படுகிற அன்பும் சிலிர்ப்பூட்டுகின்றன. மக்களின் மனதில் நிலைத்திருப்பதே ஒரு படைப்பிற்கான சிறந்த அங்கீகாரம். நல் முயற்சியை வரவேற்று கொண்டாடி வாழ்த்திய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்." "திரைப்படம் வெளியான பிறகு தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கு, கிடைத்திருக்கும் நன்மைகள், எங்கள் படைப்பின் நோக்கத்தை முழுமை அடைய செய்த தமிழ்நாடு முதல்வருக்கும், அரசுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 'துருவ நட்சத்திரம்' படப் பாடலை வெளியிட்ட ஏ.ஆர். ரஹ்மான்!

விக்ரம் நடிப்பில் கவுதம் மேனன் இயக்கியுள்ள திரைப்படம் துருவ நட்சத்திரம். கடந்த 5 ஆண்டுகளாக தயாரிப்பில் இருந்த இந்தப் படம், ஒரு வழியாக பிரச்சினைகள் அனைத்தும் பேசி தீர்க்கப்பட்டு, வரும் 24–ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.

ஸ்பை திரில்லர் ஜானரில் உருவாகியுள்ள இப்படம் விக்ரம் ரசிகர்களுக்கு தரமான ஆக்சன் டிரீட்டாக இருக்கும் என்கிறது படக்குழு. இப்படத்தில் விக்ரம் உடன் ரிது வர்மா, சிம்ரன், ராதிகா, பார்த்திபன், விநாயகன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்நிலையில் இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற நிலையில் அதன் தொடர்ச்சியாக டிரைலரையும் படக்குழு வெளியிட்டது. விக்ரமின் ஆக்சன் ட்ரீட்டாக வெளியான இந்த டிரெய்லர், படத்தின் மீதான எதிர்பார்ப்பை எகிற வைத்துள்ளது. இந்நிலையில் தற்போது நரச்ச முடி என்ற பாடல் துருவ நட்சத்திரம் படத்தில் இருந்து வெளியாகியுள்ளது. ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ள இந்தப் பாடலை ஏ.ஆர்.ரஹ்மான் வெளியிட்டுள்ளார். வழக்கம்போல பாடல் வரிகளை தாமரை எழுத, செம்ம ஸ்மார்ட்டான மெலடியாக உருவாகியுள்ளது. ஸ்ரீலேகா பார்த்தசாரதி இந்தப் பாடலை பாடியுள்ளார்.



## தனுஷின் அடுத்த அதிரடி!

தனுஷ் நடித்து இயக்கி வரும் 'டி50' என்ற படத்தின் படப்பிடிப்பு இறுதி கட்டத்தை அடைந்துள்ள நிலையில், தற்போது மேலும் ஒரு திரைப்படத்தை இயக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளன. தனுஷ் இயக்கும் மூன்றாவது படத்தில் அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் ஹீரோவாக நடிக்க இருப்பதாகவும் இந்த படத்தை இயக்குவதோடு தனுஷ் சிறப்பு தோற்றத்தில் நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. கோபுரம் பிலிம்ஸ் நிறுவனம் இந்த படத்தை தயாரிக்க இருப்பதாகவும் இந்த படத்தின் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு தொடங்கும் என்கிறார்கள். இப்படத்தை தொடர்ந்தே சேகர் கம்முல்லா இயக்கத்தில் உருவாக இருக்கும் தமிழ், தெலுங்கு படத்திலும் அதன் பிறகு ஆனந்த் எல். ராய் இயக்கத்தில் தேரே இஷ்க் மெய்ன் பாலிவுட் படத்திலும் நடிக்கிறார். இப்படப்பிடிப்பின் போதே மாரி செல்வராஜ் இயக்கத்திலும் தனுஷ் நடிக்கவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

